கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
9-12-1973
40 காசு



வளரும் குழந்தைகளுக்கு
இனிய போர்ன்விடா!



சக்தி. வளரட்டும்! பள்ளியிலும்... விளையாட்டிலும்!

சக்தி வளரட்டும்! பள்ளி-
யிலும் விளையாட்டிலும்,
இன்றும் என்றுமே வெற்றி
அவனுக்கே. ஆம்! அவன்
சுவைத்துப் பருகுவது
போர்ன்விடா. ஊட்ட-
மளிக்கும் **கோகோ,** பால்,
மால்ட், சர்க்கரை இவை
இனிதே கலந்திட்ட
போர்ன்விடாவிலே
அடங்கியுள்ளது அவனு-
டைய ஒளிமிக்க எதிர்காலம்.

ஊட்டமளிக்கும்
போர்ன்விடா ஒரு
இன்சுவையுள்ள
பானம். ஏனெனில்
இதில் கோகோ
உள்ளது.



காட்பரிஸ்
போர்ன்விடா சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் நீடிக்கவைக்கும்

OBM-0449 TAM



கோகுலம்

மலர் 2 : இதழ் 18

டிசம்பர் 9, 1973

பிரமாதீச, கார்த்திகை 24




அட்டையில் :

ஆஞ்சநேயர் பெருமை

அஞ்சாம் பக்கம் பாரு!

வண்ணப்படம் : விநு

உயிர்களிடத்து அன்புவேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்—பாரதியார்



சந்தா விவரம் :

உள் நாடு :

ஒரு வருடம் ... ரூ. 10–00

ஆறு மாதம் ... ரூ. 5–00

இலங்கை :

ஆண்டுச் சந்தா : ரூ. 15–00

(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் :

ஆண்டுச் சந்தா ரூ. 25–00

★

மானேஜர், கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை - 600031

பல விஷயங்கள் குழந்தைகளுக்கு கற்பிக்கப்படவேண்டும்



சில விஷயங்களை அவர்கள் தாங்களாகவே கண்டுபிடித்துவிடுவார்கள்

மிட்டாய்களில் சிறந்தது எது என்பது.
அதில் ஒன்று. குழந்தைகளின்
இரத்தத்தில் ஊறிய உணர்வு அது.
பம்பரங்கள், கோலிகள், கற்கண்டு
இவைகள் பற்றி யார் கற்றுத் தருகிறார்கள்!
ஆகவே குழந்தைகள் "நியூட்ரின் மிட்டாய்கள்"
தின்னத் தின்ன திகட்டாதவை என்று
சொன்னால் அதற்கு ஒரு முக்கிய காரணம்
உண்டு என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.
பல ரகங்கள் கொண்ட காபி டாபிகள்,
கோகோனட் பான் பான்கள், ஆரஞ்சு
காண்டிகள், லாக்டோ பான் பான்கள்-பால்,
மால்ட், தேன் சர்க்கரை சத்து நிறைந்தவை.
இவைகளிலிருந்து குழந்தைகள் தப்பமுடியாது.

nutrine

நியூட்ரின்

தின்னத் தின்ன திகட்டாத மிட்டாய்

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
பலமனேர் ரோடு. சித்தூர். (ஆ.பி.)

HCH-4/73 TAH

அவரை நேரில் கண்டு
ஆசி பெறுவேன் என்று
சிவராம் என்றோர் சிறுவன்
தினமும் எண்ணுவ துண்டு.

சேதித் தாளில் அவரின்
சிந்தனை செறிந்த பேச்சு
ஏதும் உண்டோ என்று
என்றும் சிவராம் பார்ப்பான்

பார்த்தால் விடவே மாட்டான்;
படித்துப் படித்துப் பார்ப்பான்.
'யார்தான் இவர்போல் சொல்வார்!
இவரே அறிவின் சிகரம்!'

என்றெல்லாம் புகழ் பாடி
எண்ணம் கொள்வான் கோடி.
'என்றும் வாழும் தலைவர்
இவரே' என்பான் சிவராம்.

உலகப் பெரியோர் எல்லாம்
'ஓஹோ, ஓஹோ' என்று
தலைவர் அவரைப் புகழுதல்
'சரிதான், சரிதான்' என்பான்.

அவரை விரைவில் கண்டு
ஆசி பெறுவேன் என்று
சிவராம் மீண்டும் மீண்டும்
சிந்தனை கொண்டான் அன்றும்

திடும்என வந்தது அன்று
திடுக்கிட வைக்கும் சேதி
நடுங்கிப் போனான் சிவராம்
'நானோர் பாவி' என்றான்.



முரளி கிருஷ்ணன்

'மறைந்தார் எனது தலைவர்
மரணம் ஐயோ கொடிது!
இறைவா, அவரை இனிமேல்
எப்படிக் காண முடியும்?'

அழுதான் கலங்கிக் கலங்கி;
ஆறாய்க் கண்ணீர் பெருக.
தொழுதான் தலைவர் படத்தை;
துயரின் உருவாய் நின்றான்.

தந்தை வந்தார் அங்கே
தகவல் யாவும் அறிந்தார்
'சிந்தை கலங்கிட வேண்டாம்;
சிறுவா, அமைதி' என்றார்.

'பிறந்தால் இறப்பும் உண்டு
பெரியோர்க்கும் அது உண்டு
இறந்தவர் பெரியோர் ஆனால்
இறப்பின் தன்மை வேறு

மறைந்தவரோ, மாமேதை;
மாநிலம் போற்றும் அறிஞர்.
சிறந்தோர் இறந்தும் வாழ்வர்;
சிரஞ்சீவித்வம் பெறுவர்'

என்றும் நம்முள் வாழும்
இறைவன் ராஜாஜிக்கு
என்றும் மரணம் இல்லை'
என்றார் தந்தை கனிவாய்!

சிவராம் ஆறுதல் கொண்டான்;
சிந்தனை யோடு நின்றான்.
'அவரை மனத்தால் காண்பேன்;
ஆசி பெறுவேன்' என்றான்!



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

சந்திரனைத் தரித்தது

திருக்கயிலாய மலையில் விநாயகப் பெருமான் பூத கணங்கள் சேவிக்க எழுந்தருளியிருந்தார். அப்போது அடியார்கள் அன்புடன் விநாயகருக்கு அப்பம், பொரி, அவல் பழம் முதலியவைகளை நிவேதனம் செய்தார்கள். அடியார்கள் அன்புடன் படைத்த அவைகளை ஆனை முகக் கடவுள் தமது தும்பிக்கையால் முழுவதும் ஒரு கவளமாக எடுத்து விழுங்கி விட்டார்.

சந்திரன் அது கண்டு ஏளனமாகச் சிரித்தான். விநாயகர் வெகுண்டு, ''சந்திரனே! நமது பெருமையை அறியாது பரிகாச நகை புரிந்தனை. அதனால் உலகில் ஒளியின்றி மறைந்து போகக் கடவாய். உன்னைப் பார்த்தவர்களும் துன்ப மடையக் கடவார்கள்'' என்று சபித்தார்.

சந்திரன் ஒளி குன்றி விண்ணில் உலவாது கிடந்து துன்பமடைந்தான்.

எள்ளிவில் நகையெவ
சீடத்துச் செய்யினும்
தொள்ளையி னுமது
துன்பஞ் செய்வதே
ஒள்ளியர் முன்புரிந்
துய்குவார் எவர்?
தெள்ளிய திங்களுந்
தீது முந்தலால்

ஆண்டவனையும் ஆன்றோர்களையும் கண்டு பரிகசித்து நகைத்தவர்கள் வருந்துவர் என்பது உறுதி.

திங்கள் ஒளி குன்றி மறைந்ததால் தேவர்கட்கு அமுத பானம் கிடைக்காமல் போய்விட்டது. இமையோர் இந்திரனிடம் போய் முறையிட்டார்கள். தேவர் கோமான் வருந்தி, இத் துயரத்தைத் தவிர்க்க வல்லவர் விநாயகப் பெருமானேயாகும் என்று கருதினான். தேவர்களுடன் கணேசப் பெருமான் திருமுன் சென்று பலமுறை பணிந்தான்.

''அருட்பெருங் கடலே! ஆனைமுகத் தண்ணலே! மண்ணுலகத்தாருக்கு உணவும், விண்ணுலகத்தாருக்கு அமுதமும் அளிக்குமாறு சந்திரனுக்குத் தேவரீர் பணித்தருளினீர். எல்லாம் தங்கள் கருணை ஒன்றினாலேயே நிகழும். சந்திரன் ஒளி குன்றியபடியால் விண்ணும் மண்ணும் துன்புறுகின்றன. சிறியோர் செய்த பிழைகளைப் பெரியோர் பொறுத்தருள வேண்டும். கருணைக் கடலே! மதி, மதியின்றிச் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று கூறி வேண்டினான்.

விநாயகர், ''இந்திரனே! நெருப்பு சந்தனமாக ஆனாலும், மேரு மலை கடலில் மிதந்தாலும், சூரியனை இருள் மூடினாலும் நமது மொழி மாறாது. உங்கள் அன்புரைக்கு அருள் புரிகின்றோம். சந்திரன் இனி ஒளியுடன் உலவுவான். நாம் முன்பு கூறிய மொழிப்படி ஆவணி மாதம் அமாவாசைக்குப் பின் வரும் நாலாவது திதியில் சந்திரன் தோஷம் உள்ளவனாக ஆவான். அன்று சந்திரனை யாரும் பார்க்கக் கூடாது. பார்த்தால் வறுமை, நோய் முதலிய பலவகைத் துன்பத்தை அடைவார்கள். அன்று நம்மை வழிபட்டோர் எல்லா நலன்களையும் பெறுவார்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளிக் கருணை புரிந்தார்.

இந்திரன் தேவர்களுடன் சந்திரனிடம் சென்று விநாயகருடைய கருணை மொழியைக் கூறி விநாயகருடைய திருமந்திரத்தை உபதேசித்தான்.

சந்திரன் மகிழ்ந்து கங்கா நதிக்குத் தென் கரையில் ''சர்வ சித்தி'' என்ற தலத்தில் தங்கி இருபத்திரண்டு ஆண்டுகள் ''ஓம் கணேசாய நம:'' என்ற திருமந்திரத்தை ஓதி உள்ளம் உருகி அரிய தவம் செய்தான்.

ஆனை முகக் கடவுள் அவனுக்குக் காட்சியளித்தார். சந்திரன் கணேசப் பெருமானைக் கண்டு கண்ணீர் சொரிந்தான். ''அருள் பெருங் குன்றே! அடியேன் அறியாமையால் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்'' என்று வேண்டினான்.

விநாயகர் சந்திரனுக்குத் தண்ணருள் புரிந்து, ''திங்களே! ஒவ்வொரு மாதத்திலும் முன்பக்கம் சதுர்த்தியன்று காலையில் நீராடி, நீறாடி உண்ணாது நோன்பிருந்து என்னை வழிபடுவோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர். சதுர்த்தியாகிய அன்று மாலை உன்னையும் என்னையும் வணங்குவார்களாக. ஆவணி சதுர்த்தியில் மட்டும் உன்னைப் பார்க்காதிருப்பார்களாக. உன்னுடைய கலைகளில் ஒன்று நம்முடைய முடி மீது விளங்குக'' என்று கூறியருளி ஒரு கலையைச் சூடிக் கொண்டார்.

சந்திரன் தனக்கு விநாயகர் அருள் புரிந்த அந்த இடத்தில் திருக்கோயிலை அமைத்து அதில் விநாயகர் திருவுருவை நிறுவி, பால சந்திர விநாயகர் என்று பேர் சூட்டிச் சிறந்த வழிபாடுகள் செய்தான்.

அத்தலமாகிய சர்வ சித்தியில் அமரர்களும் அடியார்களும் பால சந்திர விநாயகரை வழிபட்டு நலம் பெற்றார்கள்.

ஜெய் ஹனுமான்



இவன் பெயரை மனத்தில் நினைத்தாலே அறிவு, வலிமை, புகழ், தைரியம், அச்சமின்மை, ஆரோக்கியம், சோம்பலின்மை, வாக்கு வன்மை அனைத்தும் உண்டாகும் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இவன் கதையைப் படிக்க ஒரு வாய்ப்பு இதோ :

23-12-73 இதழ் முதல் கோகுலத்தில் சித்திரத் தொடராக வருகிறது. வீர ஹனுமானின் கதை உங்கள் நண்பர்களுக்கெல்லாம் சொல்லுங்கள்.

ராம ராம ராம ராம ராம ராம்

கழுதையும் மூட்டையும்



ராஜாஜி





அழுக்குமூட்டை ஏற்றிக் கழுதையை ஓட்டிக் கொண்டிருந்தான் வண்ணான். நம்முடைய நாட்டுக் கழுதைகள் தெரியுமே, பிறப்பு, தீனி, பலம் எல்லாம் மட்டம். கழுதை மேல் ஏற்றும் இரட்டை மூட்டையும் உங்களுக்குத் தெரியும், இரண்டு பக்கம் சம பாரமாகத் தொங்கும், கழுதையின் முதுகு வளைந்து போகும்.

இப்படிப் போய்க் கொண்டிருக்கும் போது மூட்டை கழுதையுடன் பேச ஆரம்பித்தது. ''ஏ, கழுதையே ! உன்னைப் போல் சாதுவை நான் கண்டதில்லை. எவ்வளவு அடித்தாலும் கேட்டுக் கொண்டிருக்கிறாய். உன்னைப் பற்றி எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.''

இப்படி மூட்டை சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஓர் அடி கொடுத்தான், பின்னால் நடந்துவந்த வண்ணான்.

''உன் மேல் நான் ராஜா மாதிரி சவாரி செய்கிறேன், தெரியுமா? அரண்மனைக் குதிரையைப் போல் தலை தூக்கி நட. தொங்கப் போட்டுக்கொண்டு நடக்காதே'' என்றது மூட்டை.

பாவம் கழுதைக்கு அடி வேறு ; அவமானம் வேறு.

''அழுக்கு மூட்டையே ! அகங்காரப்பட வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் என்ன ஆகப் போகிறது பார் !'' என்றது கழுதை.

''என்ன ஆகப் போகிறது? ஒன்றுமில்லை. பேசாமல் நட!'' என்றது மூட்டை.

ஆற்றங்கரை வந்ததும் வண்ணான் மூட்டையை எடுத்துக் கரையில் வைத்துவிட்டுக் கழுதையைப் புல் மேய விட்டுவிட்டான். அது ஆற்றில் தாகம் தீர்த்துக் கொண்டு கரை மேல் சந்தோஷமாக ஓடிச் சென்றது.

மூட்டையை அவிழ்த்துத் துணிகளைப் பிரித்து வண்ணானும் அவன் மனைவியும் துவைக்க ஆரம்பித்தனர். ''உஸ்! உஸ்!'' என்று கல்மேல் போட்டு அடித்தார்கள்.

கழுதை மேலே கரையில் நின்று பல்லைக் காட்டிற்று. ''அடி ! போடு ! இன்னும் போடு !'' என்றது. ''அகங்

காரத்தை நன்றாகக் கசக்கிப் பிழிந்து போடு! அடி! இன்னும் போடு!'' என்றது.

''ஐயோ, போதும், இனி மேல் அப்படிப் பேசமாட்டேன்!'' என்றது துணி.

வண்ணான் அதைக் கேட்கவில்லை. அது பேசியதும் அவனுக்குத் தெரியாது. அவன் கவனம் எல்லாம் துவைப்பதில். அடியடி என்று அடித்துக் கொண்டே இருந்தான். இப்படியே துணிகளை எல்லாம் துவைத்துவிட்டு வெயிலில் புல் தரையில் விரித்து உலர வைத்தான்.

''புத்தி வந்ததா?'' என்றது கழுதை.

'' வந்தது அப்பனே !'' என்றது துணி.

''இன்னும் உன் கதை முடியவில்லை, அப்பனே!'' என்றது கழுதை.

''ஐயோ, அதுவென்ன? சொல்!'' என்றது வெள்ளைச் சொக்காய்.

''வீட்டுக்குப் போனபின் உனக்கே தெரியும். இப்போது சொல்ல அவசரமில்லை!'' என்றது கழுதை.

வீட்டில் துணிகளை மடித்து இஸ்திரி போட்டான் வண்ணான். சுடச்சுட இஸ்திரிப் பெட்டியை வைத்தான் சொக்காய் பேரில்.

'' ஐயோ, செத்தேன் !'' என்றது சொக்காய்.


வண்ணான் காதில் அது ஏறவில்லை. அவன்பாட்டுக்கு அழுத்தி இழுத்தான். மூச்சு நின்று போயிற்று சொக்காய்க்கு.

''அற்ப நேரம் என் முதுகின் பேரில் சவாரி செய்தாய். என்ன என்னவோ பேசினாய். இப்போது என்ன சொல்லுகிறாய்?'' என்றது கழுதை வாசலிலிருந்து.

''அப்பா தம்பி! நீ சும்மா இரு. எனக்குப் புத்தி வந்தது. சவாரியும் போதும், பிறகு கஷ்டமும் போதும். இனி மேல் நான் உன் மேல் ஏறமாட்டேன்'' என்றது.

''உன் கதி இதுவே. நீ கிழிந்து குப்பைக்குப் போகும் வரையில் வண்ணான் கையில் இதையெல்லாம் அநுபவிக்க வேண்டும். தெரிந்து கொள்'' என்றது கழுதை.

''நீ படும் கஷ்டம் பெரிதல்ல. என் கஷ்டமே பெரிது'' என்றது துணி.





பாரதியார்

முண்டாசு தலையில் கட்டி
முறுக்குமீசை முகத்தில் வைத்து
விடுதலைக்குப் பாடியவன் யாரடி?—அது
வீரத்தமிழ் சுப்ரமண்ய பாரதி !

சுதந்திரத்தை வாங்கிடவே
சுதேசிக் கப்பல் ஓட்டியநல்
சிதம்பரனார் தோழனவன் யாரடி?—எம்
சிந்தைகவர் சுப்ரமண்ய பாரதி !

குழந்தைகளே உங்க ளுக்கு
குலைவாழை போல் இனிக்கும்
மழலைமொழிப் பாடல்சொன்ன தாரடி?
—தமிழ்
மண்பிறந்த சுப்ரமண்ய பாரதி !


பாஞ்சாலி சபத மதைப்
பாட்டினிலே பாடி; தேசப்
பற்றுதனை வளர்த்தகவி யாரடி?—எங்கள்
பைந்தமிழன் சுப்ரமண்ய பாரதி !

விடுதலைத்தீ நாட்டி லோங்க
வீறுகொண்டு தேச பக்திப்
பாடல்களைப் பாடியவர் யாரடி?—தமிழ்
பாட்டுக்கொரு சுப்ரமண்ய பாரதி !

சூழ்ந்துநின்ற வறுமை யிலும்
சுதந்திரத்துக் காகப் பாடி
வாங்குமுன்னே சென்ற கவி யாரடி?
—யாரும்
வாழ்த்துகின்ற சுப்ரமண்ய பாரதி !

● ● ● கோவூர் இசைதாசன் ● ● ●





பூமாலை சூடித் திருமாலை நாடினாள்

☐ காஞ்சிபுரத்தில் ஒரு "தாத்தா" இருக்கிறார். அவரைப் பார்த்தாலே கடவுள் மாதிரி இருக்கும். அத்தனை அன்பு சொட்டும். அதனால் அவர் உங்களுக்கெல்லாம் "உம்மாச்சித் தாத்தா". பெரியவர்கள் அவரை சங்கராசாரிய ஸ்வாமிகள் என்று சொல்வார்கள்.

உம்மாச்சித் தாத்தா உங்களுடைய நன்மையையே எப்போதும் நினைக்கிறார். நீங்கள் எப்படி எப்படி நடந்தால், கடவுளின் அருளைப் பெற்று மேன்மை அடையலாம் என்று அவர் கூறுகிறார். அவர் உங்களிடம் விரும்புகிற ஒரு காரியம் — மார்கழி மாதத்தில் தினந்தோறும் நீங்கள் காலையிலேயே நீராடி, நெற்றிக்கு இட்டுக்கொண்டு, கடவுள் படத்தின் முன்னால் உட்கார்ந்து கொண்டு திருப்பாவை – திருவெம்பாவைப் பாடல்களைப் படிக்க வேண்டும் என்பது. மகாவிஷ்ணுவைப் பற்றி ஆண்டாள் பாடிய முப்பது பாடல்கள் திருப்பாவை. பரமசிவனைப் பற்றி மாணிக்கவாசகர் பாடிய இருபது பாடல்கள் திருவெம்பாவை. வருகிற டிசம்பர் 16லிருந்து ஜனவரி 13 முடிய மார்கழி மாதமாகும். என்ன, பாவைப் பாடல்களைப் பாடி மகாவிஷ்ணு, பரமசிவன், உம்மாச்சித் தாத்தா ஆகியோரது ஆசிர்வாதத்தைப் பெறுவீர்கள் அல்லவா?

இங்கே திருப்பாவை பாடிய ஆண்டாளின் கதையைப் படியுங்கள். அதைப் படித்தால் உங்களுக்குத் திருப்பாவை பாட தானே ஆசை பிறக்கும். ☐

ஸ்ரீவில்லிப்புத்தூரில் விஷ்ணுசித்தர் என்று ஒரு பெரியவர் இருந்தார். அவருடைய சித்தம் எப்பொழுதும் விஷ்ணுவிடமே நிலைத்திருந்தது. அவர் தம்முடைய ஆழ்ந்த பக்தியை அழகிய தமிழில் பாடல்களாகப் பாடி, "ஆழ்வார்"களில் ஒருவர் ஆனார். அவர் மிகவும் பெருமை பொருந்தியவராதலால் "பெரியாழ்வார்" என்றே பெயர் பெற்றார்.

அவர் எல்லாவிதமான மலர்களும் பூக்கிற நந்தவனம் ஒன்று வைத்திருந்தார். தினமும் அவர் அதிகாலையில் நீராடிவிட்டு அத்தோட்டத்துக்கு வந்து மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர் கோயிலில் குடிகொண்டுள்ள பெருமாளுக்கு அதை அர்ப்பணித்து வந்தார்.

அன்று ஆடி மாதம், பூரநட்சத்திரம் சேர்ந்த நாள். மலர் எடுக்க நந்தவனம் சென்ற பெரியாழ்வார் அங்கே துளசிப் புதரில் ஓர் அற்புதத்தைக் கண்டார். பூமியில் ஓர் அதிசய மலர் கிடந்தது. அதன் மென்மையையும், அதனிடமிருந்து வீசிய மணத்தையும் கண்டு முதலில் மலர் என்று எண்ணினார். ஆனால் அந்த மலர், "காகா" என்று இனிமையாகக் கத்தியது ; கையையும் காலையும் உதைத்துக் கொண்டது. இது மலர் இல்லை என்று தெளிவுபெற்று அதனை வாரி எடுத்துக் கொண்டார் பெரியாழ்வார்.

அது ஒரு பெண் குழந்தை; மலர் இல்லை. ஆனால் பல மலர்கள் ஒன்று சேர்ந்தது போல் அத்தனை அழகாக இருந்தது.

அதன் கண்களும், கைகளும் பாதங்களும் தாமரை மலர்போல் சிவப்பாக மெத்தென்று இருந்தன.

மூக்கு எள் மலர் போல் இருந்தது. கன்னங்கள் சம்பக மலர்கள்போல் இருந்தன. நகங்கள் முல்லை மொட்டுக்கள் போல் இருந்தன. பல மலர்களைச் சேர்த்துத் தொடுத்த மாலையாகவே இந்தக் குழந்தையைக் கருதினார் பெரியாழ்வார். எனவே அதற்குக் "கோதை" என்று பெயரிட்டார். கோதை என்றால் பூமாலை என்று அர்த்தம்.

ஆம், பெரியாழ்வார் தாமே அக்குழந்தையை எடுத்து வளர்க்க ஆரம்பித்துவிட்டார். பெருமாளுக்கு மிகவும் பிடித்தமான துளசிப் புதரில் திடுமென வந்து பிறந்த அந்தக் குழந்தை தமக்கென்றே பகவானால் தரப்பட்டது என்று கருதி அதை அருமை மகளாக வளர்த்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே கோதைக்குத் திருமாலின் திருவிளையாடல்களையெல்லாம் கூறிப் பக்தியை ஊட்டினார்.

குழந்தைக்கோ இயல்பாகவே பக்தி நிரம்ப இருந்தது. மற்றக் குழந்தைகள் போல் விளையாட்டுப் பொம்மைகளிலும் விஷமத்திலும் மனத்தைச் செலுத்தாமல் கோதை பச்சைக் குழந்தையாக இருந்த காலத்திலிருந்து பகவானின் விக்கிரகத்தையே நாடிச் சென்று சிரித்துச் சிரித்து மகிழ்ந்தாள். தெய்விகக் கதைகளையே கேட்டுக் கேட்டு மகிழ்ந்

தாள். வயது ஏற ஏறப் பக்தியும் முற்றியது.

இப்போது கோதை கல்யாண வயது அடைந்து விட்டாள். அவளுடைய பேரழகைப் பார்த்தவர்கள், ''இவள் சாக்ஷாத் மகாலட்சுமியோ?'' என்று ஆச்சரியப்பட்டார்கள். ''எந்த மகாவிஷ்ணு இவளைக் கைப்பிடித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் பாக்கியத்தைப் பெறுவானோ?'' என்று பேசிக் கொண்டார்கள்.

ஆனால் கோதை மனிதனாகப் பிறந்த எந்த ''மகாவிஷ்ணு''வுக்கும் மனைவியாக விரும்பவில்லை. மூலமான, மெய்யான, மகாவிஷ்ணுவே தன்னை மணந்து கொள்ள வேண்டும் என்று ஆசை கொண்டாள் கோதை.

இதை வெளியில் சொன்னால் கேலி செய்ய மாட்டார்களா? ஆதலால் முதலில் கோதை இந்த ஆசையை யாரிடமும் சொல்லாமல் மனத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தாள். தனக்குள் தானே ரகசியமாகப் பெருமாளைக் கல்யாணம் செய்து கொள்வதாயும், அவர் தன்னிடம் எல்லையில்லாத அன்பு காட்டுவதாகவும் எண்ணி எண்ணி இன்புற்று வந்தாள். இது காரியத்தில் நடக்காமல் வெறும் எண்ணமாக இருக்கிறதே என்று துன்புற்றும் வந்தாள்.

'கண்ண பெருமானுடன் திருமணத்தின்போது மாலை மாற்றம் செய்து கொள்வேன். அவன் கழுத்திலிருந்து கழற்றி எனக்குச் சூட்டிய மாலையை நான் அணிந்திருப்பேன்; அவ்விதமே என் கழுத்திலிருந்து ஹாரத்தைக் கழற்றி அவனுடைய மரகத மலை போன்ற தோளில் சூட்டுவேன். இருவரும் மாலையும் கழுத்துமாகப் பக்கத்தில் நிற்போம். அது சரி, எல்லையில்லாத அழகு வாய்ந்த எம்பெருமானின் பக்கத்தில் நான் நின்றால் அது பொருத்தமாக இருக்குமோ?' என்று எண்ணினாள் கோதை. அவள் அப்படி நினைத்தபோது மெய்யாகவே பக்கத்திலே மாலை பூண்ட மாதவன் வந்து நின்றாற்போல் இருந்தது. அவனது வடிவழகுடன் தனக்குப் பொருத்தம் பார்த்துக் கொள்வது எப்படி?


தனியாக இருந்த கோதை கொஞ்சம்கூடத் தயங்கவில்லை. வடபெருங்கோயிலில் உள்ள பெருமாளான வடபத்திர சாயிக்காகத் தொடுத்து வைத்திருந்த மாலையை எடுத்து மிகவும் உரிமையுடன் தன் கழுத்தில் அணிந்து கொண்டாள் கோதை. கண்ணாடிக்கு எதிரே வந்து நின்றாள். அதற்குள் அழகுக்கு அழகு செய்ததுபோல் அவளுடைய திரு உருவம் பிரதிபலித்தது. 'கண்ணனுக்கு ஏற்ற கன்னிதான் நான்' என்று உள்ள நிறைவு கொண்டாள்.

கோதை கழுத்திலிருந்து மாலையைக் கழற்றி முன்னிருந்தது போலவே மடித்து வைத்துவிட்டாள் — அப்பா அதைக் கொண்டு போய்ப் பெருமாளுக்குச் சாத்துவதற்காக.

பகவானுக்கு என்று உத்தேசித்து வைத்த வஸ்துக்களை நாம் உபயோகிப்பதே பாவம். அதைவிடப் பாபம், நாம் உபயோகித்த பிறகு ஒரு பொருளைப் பகவானுக்கு அளிப்பது. அப்படியானால் கோதை மகாபாவம் செய்து விட்டாளா?

அகம்பாவத்தாலும், துராசையாலும் செய்கிற காரியங்களே பாவமாகும். எல்லையில்லாத அன்புகொண்ட நிலையில் ஆண்டாள் செய்தது பாவமாகாது. கண்ணனிடம் அவள் கரைகாணாத அன்பு கொண்டாள். அவனை மணக்க விரும்பினாள். ஆனால் தனக்கும் அவனுக்கும் பொருத்தம் உண்டோ என்று மயங்கினாள், தயங்கினாள். அந்தக் கலக்கம் நீங்கவே மாலையை அணிந்து கொண்டு பார்த்தாள். 'கணவன் மனைவி மாலை மாற்றிக்கொள்வதில் தவறில்லை. எனவே நான் அணிந்த மாலையை என்னவருக்கு அனுப்புவதில் குற்றமில்லை' என்று உறுதியாக உணர்ந்தாள். ஆனால் இதைப் பெரியாழ்வாரும், கோயில் அர்ச்சகர்களும், ஊர் ஜனங்களும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பதாலேயே அவள் இதையெல்லாம் ரகசியமாகச் செய்தாள்.

விஷயம் அறியாத விஷ்ணுசித்தர் அந்த மாலையை ஆலயத்துக்கு எடுத்துச் சென்றார். அது பெருமாளுக்குச் சாத்தப்பட்டது. உடனே அந்த மாலையிலிருந்து என்றுமில்லாத தெய்விகமான மணம் வீசலாயிற்று. இயற்கையாகவே மணம் பொருந்திய அந்த மாலைக்கு இப்போது புதிதாக அற்புத வாசனை



சூடியதைக் கண்டு அர்ச்சகர்களுக்கும் ஆழ்வார்களுக்கும் அதிசயமாக இருந்தது.

மறு தினமும் ஆழ்வார் நீராடச் சென்ற போது கோதை பெருமானுக்கான மாலையை அணிந்து கொண்டு கண்ணாடி முன் நின்றாள். நேற்றே பொருத்தம் பார்த்தாகிவிட்டதே! இன்றைக்கும் ஏன் ஸ்வாமிக்கான ஹாரத்தை இவள் அணிந்தாள்? இதற்கு வேறு காரணம் இருந்தது. தான் போட்டுக் கொண்டு பிறகு அனுப்பி வைத்த மாலை பெருமானுக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் முந்தை தினம் திருமாலுக்கு அணிவிக்கப்பட்ட மாலையில் அப்போர்ப்பட்ட தெய்விகமான வாசனை உண்டாகியிருக்கிறது! தந்தை இந்த அதிசயத்தை அவளுக்குச் சொல்லியிருந்தார். தான் சூடிக் களைந்த மாலை பகவானுக்கு மிகவும் உவப்பாக இருக்கிறது என்பதே இதற்கு அர்த்தம் என்று கோதைக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. எனினும் அப்பாவிடம் அப்படிச் சொன்னால் அதிகப்பிரசங்கித்தனமாக இருக்கும் என்று அடக்கமாக இருந்துவிட்டாள் அவள்.

அன்றைக்கும் விஷ்ணுசித்தர் அம்மாலையை விஷ்ணுவுக்கு எடுத்துச் சென்றார். விக்கிரகத்தின் மீது அதைச் சாத்தியவுடனேயே இன்றும் மாலையிலிருந்து சொல்லி முடியாத சுகந்தம் எழுந்தது.

இப்படிப் பல நாட்கள் சென்றன.

ஒரு நாள் மாலை சூடிக் கண்ணாடி முன் நின்ற கோதை, 'இந்த விளையாட்டு இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கப் போகிறது? வாஸ்தவமாகவே என் கண்ணன் என்னைத் தேடி வந்து மணம் வீசும் மாலையை மாற்றிக் கொண்டு மணம் புரிவது என்றுதான் நடக்குமோ? அப்படி நடக்குமோ? அல்லது நடக்காமலே போகுமோ?' என்றெல்லாம் எண்ணி, அந்த எண்ணத்திலேயே ஆழ்ந்து சிலையாக நின்றுவிட்டாள். நீண்ட நேரம் அவளுக்குத் தன் சுற்றுப்புறத்தில் நடப்பதே தெரியவில்லை. கண்ணனுக்காகத் தவிக்கிற தவிப்பில் வெளி உலகை மறந்துவிட்டாள்.

விஷ்ணுசித்தர் இரண்டாம் முறை நீராடித் திரும்பி விட்டார். பகவானுக்கான மாலையைக் கோதை அணிந்து நிலைக் கண்ணாடி முன் நிலைத்து நின்றதைப் பார்த்தார். நெருப்பை மிதித்தது போல் பதைத்து விட்டார். 'சின்னஞ் சிறு வயதிலிருந்து பகவத் விஷயத்திலேயே ஊறிய கோதையா இப்படிப்பட்ட பெரும் அபசாரத்தைப் புரிகிறாள்!' என்று நெஞ்சு கலங்கினார்.

கோதைக்குச் சுய நினைவு வந்தது. தந்தை வந்துவிட்டதை அறிந்து திடுக்கிட்டாள். தான் செய்த 'அபசாரத்'தைப் பார்த்து அவர் பொங்குவதை உணர்ந்தாள். ஆனால் அவளைப் பொறுத்தமட்டில் அதை அபசாரம் என்றே எண்ணவில்லை அல்லவா? எனவே, உண்மை நிறைந்த கோதை பொய்யாக, போலியாக, அப்பாவிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. அதே சமயத்தில் அடக்கமே உருவான அவள், தான் செய்தது சரி என்று அவரிடம் வாதாடவும் இல்லை. வாய் மூடி மௌனியாக நின்றாள்.

அருமைப் பெண்ணாகிய கோதையைக் கடிந்து கொள்ள ஆழ்வாருக்கு மனம் வரவில்லை. 'உத்தம குணங்கள் வாய்ந்த அவள் இனி இந்த அபசாரத்தைச் செய்யமாட்டாள்; நான் அவளைக் கண்டிக்க வேண்டியதே இல்லை' என்று எண்ணினார். எனவே அவரும் மௌனமாகவே இருந்தார்.

மலர் வனம் சென்று மறுபடியும் பூக் கொய்து வேறு மாலை தொடுத்தார். அதை ஆலயத்துக்கு எடுத்துச் சென்றார். அர்ச்சகர் அதைப் பெருமானுக்கு அணிவித்தார். இன்று அரிய நறுமணம் எதுவும் எழும்பவில்லை. அது மட்டுமின்றி, மாலைக்கு இயற்கையாக உள்ள வாசனையும்கூட அமுங்கிப் போனாற் போலிருந்தது. இதெல்லாவற்றுக்கும் மேலாக பெருமானின் திருமுகமே வாடினாற்போல் தோன்றியது. 'கோதை செய்த பிழையை எனக்குச் சுட்டிக் காட்டவே பெருமான் இந்த அறிகுறிகளை உண்டாக்கி யிருக்கிறார்' என்று எண்ணி விட்டார் விஷ்ணுசித்தர்.

அன்றிரவு ஆழ்வாருக்கும் தூக்கம் இல்லை; கோதைக்கும் தூக்கம் இல்லை. இருவரும் வெவ்வேறு விதத்தில் மனம் நொந்து உறங்காமல் துவண்டனர். நள்ளிரவு கடந்தபின்பே ஆழ்வார் நித்திரை கொண்டார்.



அன்று அவர் அடைந்த துயரத்துக் கெல்லாம் ஈடுசெய்வது போன்ற ஓர் இன்பக் கனவு கண்டார்.

நீலமேகம் போல் கோலத் திருமேனி கொண்ட பெருமான் பெரியாழ்வாரின் கனவில் வந்தான். ஆழ்வார் பேரானந்தம் அடைந்தார். ஆனால் உடனேயே கோதை செய்த அபசாரமும், விக்கிரகத்தின் முகம் வாடியதும் நினைவில் வந்தன. வேதனையுற்றார். ''பிழை பொறுத்தருள், பெருமானே!'' என்று அழுதார்.

''பிழையா? எது பிழை?'' என்று முத்துச் சிரிப்பு சிரித்தான் மோகனப் பெருமான். ''கோதை அணிந்த மாலையை நீ எனக்குக் கொண்டு வந்து தராததுதான் பிழை. பூமாதேவியே அவள். அவள் சூடிக் களைந்த மாலையையே நான் பெரிதும் விரும்புகிறேன். இனிமேல் தினமும் எனக்காகக் கட்டும் மாலையை முதலில் அவள் அணிந்து கொண்டு பிறகு எனக்காக அனுப்பி வைக்கட்டும். கடந்த சில தினங்களாகவே இப்படித்தான் ரகசியமாக நடந்து வருகிறது. எனக்குச் சூட்டிய மாலையில் புது மணம் பிறப்பதற்கு இதுவே காரணம்'' என்று கூறி மறைந்தார் மகாவிஷ்ணு.

விஷ்ணுசித்தருக்கு அது வெறும் கனவாகத் தோன்றவில்லை. பெருமானின் திவ்விய ரூபமும், தேன் வாக்கும் மிக மிக உண்மையாகவே தோன்றின. எனவே 'வெறும் கனவுதானே?' என்று அலட்சியப்படுத்தாமல், மறு நாள் மாலை தொடுத்தவுடன் அதைக் கோதையிடம் கொடுத்துச் சூட்டிக் கொள்ளச் சொன்னார். இரவில் இறைவன் இட்ட ஆணையையும் அவளிடம் உணர்ச்சியுடன் கூறினார்.

கோதை பூரித்துப்போனாள். 'ஆஹா! என் கண்ணனின் கருணைதான் எப்படிப்பட்டது?' என்று உருகினாள். 'ஆயினும் அந்தத் தரிசனத்தை எனக்குத் தராமல் ஏமாற்றிவிட்டானே!' என்று ஏங்கவும் செய்தாள்.

மாலையை அணிந்து கொண்டு, பிறகு கழற்றித் தந்தையிடம் கொடுத்தாள்.

அதை ஆலயத்துக்கு எடுத்துச் செல்கையில் தனது கனவையும், இம்மாலை கோதை சூடிக் கொடுத்தது என்றும் அர்ச்சகருக்குத் தெரிவித்துவிட வேண்டும்; இல்லாவிடில் அவர்களை ஏமாற்றியதாகும்; ஆனால் இதை எல்லாம் அவர்கள் மதித்து ஏற்றுக் கொள்வார்களா? என்று ஆழ்வார் எண்ணிக் குழம்பினார்.

இவர் கோயிலை நெருங்கும்போதே பூஜை செய்யும் பட்டர்கள் இவரை நோக்கி வேகமாக ஆர்வத்துடன் வந்தார்கள். ஆழ்வாருக்கு ஆச்சரியமாயிற்று.

''ஆழ்வார் ஸ்வாமிகளே! வாருங்கள், வாருங்கள்! தங்கள் அருமைக் குமாரி கோதையையும் அழைத்து வந்திருக்கலாகாதோ? இனி அவள் கோதை இல்லை. அவள் **சூடிக் கொடுத்த சுடர்க்கொடி** ஆகிவிட்டாள். தங்கள் குமாரி செய்த தெய்விகச் செயலால் எங்களுக்கெல்லாம் நேற்றிரவு சொப்பனத்தில் பகவானின் தரிசனம் கிடைத்தது.... ஆமாம், எங்கள் ஒவ்வொருவர் கனவிலும் பெருமாள் வந்து, 'இனி எனக்குக் கோதை மாலை சூடிக் களைந்து அனுப்பி வைப்பாள். அதையே ஆவலோடு அணிந்து கொள்வேன்' என்று திருவாய் மொழிந்து அருளினார். 'அவளைச் சாதாரணமாக எண்ணாதீர்கள்; நான் எல்லோரையும் ஆளுகிற ஆண்டவன் என்றால் கோதையோ என்னையும் தன் அன்பினாலே ஆளுகிற **ஆண்டாள்** என்று தெரிந்து கொள்ளுங்கள்' என்றும் பெருமாள் கூறினார்.'' இப்படிப் பரவசத்துடன் அந்த அர்ச்சகர்கள் கூறி, விஷ்ணுசித்தர் கொண்டு வந்திருந்த மாலையை வாங்கிச் சென்று வடபத்ரசாயிக்கு அணிவித்தனர்.

ஆஹாஹா! இன்று அதிலிருந்து எழுந்த அபார மணம் கோயில் முழுதும் பரவி, வெளிச் சென்று ஸ்ரீவில்லிப்புத்தூர் முழுதுமே கமழ்ந்தது. மாலை சூட்டியவுடன் இன்று பெருமானின் திருமுகம் அற்புதப் பொலிவுடன் மலர்ந்து கண்களைக் கூசச் செய்தது!

அன்றிலிருந்து கோதைக்கு, ''சூடிக் கொடுத்த சுடர்க்கொடி', 'ஆண்டாள்' என்ற பெயர்கள் ஏற்பட்டன. ஊர் உலகமெல்லாம் அவளுடைய பக்தியைப் புகழ்ந்து அவளை வணங்கின; நாயகனை திருமாலின் பத்தினியான ''நாச்சியார்'' என்று நாமமிட்டு நமஸ்கரித்தன.



பூமாலை சூடி அனுப்பிய ஆண்டாள், பெரியாழ்வாரைப்போலவே பகவானைக் குறித்துப் பாடல்கள்பாடிப் பாமாலையும் சாத்தினாள். அமுதம் போல் இனிய தமிழில் அடர்ந்த பக்தியைப் பெருக்கும் அப்பாடல்களுக்கு ''நாச்சியார் திருமொழி'' என்று பெயர். பரமனைப் பாடிய பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரே ஒரு பெண்ணாக ஆண்டாளையும் சேர்த்து, அவள் பாடிய, 'நாச்சியார் திருமொழி'யை ஆழ்வார்களின் 'திவ்யப் பிரபந்த'த்தில் நடுநாயகமாக வைத்து இன்றளவும் உலகம் போற்றுகிறது.

ஆண்டாள் விரும்பியதுபோல இறைவன் அவளை மணந்தானா? முதலில் கனவில் வந்து மணந்து மறைந்தான். அந்தக் கனவுக் கல்யாணத்தை அற்புதப் பாடல்களாக அவள் பாடியிருக்கிறாள். கனவு நனவாகவில்லையே என்ற தாபத்தையும் அழகொழுகும் பாசுரங்களாகப் பாடினாள்.

கண்ணன் இம்மண்ணில் பிறந்து ஆயர்பாடியில் வளர்ந்தபோது அவனை மணக்க விரும்பிய கோபிகள் எனும் இடையர் சிறுமிகள், மார்கழி மாதக் குளிரையும் பொருட்படுத்தாமல் தினந்தோறும் அதிகாலையில் யமுனைக் கரைக்குச் சென்று நீராடி அங்கு பார்வதி தேவிக்குப் பூஜை செய்ததைப் பற்றி அறிந்தாள் ஆண்டாள். பூஜையின் பலனாக இறுதியில் கண்ணன் கோபிகைகளோடு சேர்ந்து 'ராஸ லீலை' என்கிற ஆனந்தத் தாண்டவம் செய்ததையும் அறிந்தாள். தான் அந்தக் கோபிகைகளில் ஒருத்தியே என்று கருதினாள். ஸ்ரீ வில்லிப்புத்தூரில் இருந்த எல்லாக் கன்னிப் பெண்களையும் கோபிகைகளாகக் கருதினாள். ஸ்ரீவில்லிப்புத்தூரையே ஆயர்பாடியாக எண்ணினாள். உடனே, ''திருப்பாவை'' என்ற முப்பது அரிய பாடல்களைக் கடல் மடை திறந்தது போல் பாடிவிட்டாள். பார்வதி தேவியின் விக்கிரகத்தை வைத்து ஆய்ச்சிகள் செய்த வழிபாட்டுக்குப் பாவை நோன்பு என்று பெயர். அதே போல் நோன்பு நோற்றுக் கண்ணனைக் கணவனாக அடைவதற்காக மற்றக் கன்னிகளை அழைக்கிற முறையில் ''திருப்பாவை'' பாடினாள் கோதை.


அன்று பாவை நோன்பு நோற்ற ஆய்ச்சியருக்கு அருள் செய்த கண்ணன் இன்று நாச்சியாருக்கு அருள் செய்ய ஏனோ மறுத்தான். தன்னைக் காணாமல் தவித்துத் தவித்து அவள் பாடுகிற பாடல்களில் உள்ள அன்புச் சுவையை அநுபவிப்பதற்காகவே அவன் இப்படிச் சோதனை செய்தான்.

முன்பு தன் அன்பை ரகசியமாக வைத்துக் கொண்டிருந்தாள் ஆண்டாள். இப்போது பகவானை அடைய வேண்டும் என்கிற ஆர்வம் உச்ச நிலை அடைந்து பக்தி வெறியாகிவிட்டது. எவரைக் கண்டாலும் அவரிடம் கண்ணன் பலவேறு லீலைகளைச் செய்த இடங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி ''என்னை அங்கே கொண்டு போய்க் கிடத்துங்கள்'' என்று கதறினாள்; உடல் மெலிந்து, உதடு வெளிறிச் சருகு போல் தரையில் விழுந்து கிடந்தாள். ''கண்ணன் உடுத்தும் பீதாம்பரத்தால் என் எரிச்சல் போக விசிறுங்கள்; கண்ணன் ஊதும் குழலில் நீர் முகந்து வந்து என் மீது தாபம் தீரத் தெளியுங்கள்' என்றெல்லாம் பாடல் பாடி அலறினாள்.

தந்தையாரிடம் பகவான் கோயில் கொண்டுள்ள திவ்விய தேசங்கள்எல்லாவற்றையும் பற்றி ஓயாமல் கேட்டாள். ஆங்காங்கு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையெல்லாம் அவரிடம் பேரார்வத்துடன் கேட்டாள். அவரும் அவ்விதமே விரித்துக் கூறினார். திரு அரங்கம் என்று சொல்லப்படும் ஸ்ரீரங்கத்தில் பொன் விமானத்தின் கீழ், பாம்புப் படுக்கையில் சயனித்துள்ள ஸ்ரீரங்கநாதப் பெருமானின் பெருமைகளைப் பெரியாழ்வார் கூறியவுடன் ஆண்டாளால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

''அப்பா! அவர்தான் என் நாயகர். அவரை நான் மணந்தே ஆக வேண்டும். அவரும் நிச்சயமாக என்னைக் கல்யாணம் செய்து கொள்வார். கொஞ்சம் கூடச் சந்தேகப்படாதீர்கள். இப்போதே என்னை அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்'' என்று துடியாகத் துடித்தாள் சுடர்க்கொடி.

பெரியாழ்வார்பரம பக்தரானாலும், கடவுள் எங்காவது நேரில் வந்து



ஒரு பெண்ணை மணப்பாரா என்று குழம்பத்தான் செய்தார். கோதையை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று அவருக்குத் தெரியவில்லை.

இச்சமயத்தில் வீட்டு வாசலில் ஓர் அலங்கார முத்துப் பல்லக்கு வந்து நின்றது. அதன் பின்னால் ஒரு யானை வந்து நின்றது. யானை மேலிருந்து பாண்டிய நாட்டு மன்னனான வல்லப தேவன் இறங்கினான்.

ஆழ்வாரின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

பாண்டிய ராஜன் உள்ளே வந்து பெரியாழ்வாரையும், ஆண்டாளையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான்.

''கோதையாரை முத்துப் பல்லக்கில் ஏற்றித் திருஅரங்கத்துக்கு அழைத்து வருமாறு என் கனவில் தோன்றிக் கண்ணன் கட்டளை இட்டிருக்கிறான்'' என்று அடக்க ஒடுக்கத்துடன் விண்ணப்பித்துக் கொண்டான். பக்தியின் பெருமை அப்படிப்பட்டது! கன்னி ஆண்டாள் முன் மன்னன் கை கட்டி நிற்கிறான்!

ஆழ்வாருக்கு அப்போதே தெளிவு பிறந்தது. மெய்யடியார்களுக்காக மெய்யாகவே இறைவன் அருள் செய்கிறான் என்று உறுதி பெற்றார்.

அனைவரும் அரங்கத்துக்குப் புறப்பட்டனர். அரங்க நாதனையே தன் அந்தரங்கத்தில் நினைந்து நினைந்து உருகியவாறு முத்துச் சிவிகையில் சென்றாள் அன்பின் உருவான ஆண்டாள்.

அரங்கப் பெருமான் ஸ்ரீரங்கத்துக் கோயிலைச் சேர்ந்தவர்களிடம் திருமண ஏற்பாடுகளைச் செய்யுமாறு சொப்பனக் கட்டளை இட்டிருந்தான்.

எனவே கோதை கோஷ்டி ஸ்ரீரங்கத்தை அடைந்தபோது அந்தமாநகரமே மணக்கோலம் பூண்டு தோரணக் கம்பங்களும், பூரணக் கும்பங்களுமாக விளங்கியது.

முரசம், ஊதுகுழல், எக்காளம் முதலியவற்றை விண்ணதிர முழக்கிக் கோதையை திருவரங்க ஆலயத்தினர் வரவேற்றனர்.

''அருளுடன் வந்தாள் ஆண்டாள்.''

''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்.''

''பாவை அளித்த பாவை வந்தாள்.''

''வந்தாள் வந்தாள் வரந்தர வந்தாள்.''

''பராக் பராக்! பார்மகள் வந்தாள்'' என்று ஊர் மக்கள் யாவரும் ஜய கோஷம் செய்து ஆண்டாளை வரவேற்றனர்.

ஆனால் கோதைக்கோ இந்த உபசார அமர்க்களம் எதுவுமே தெரியவில்லை. அவளுடைய கருத்து முழுதும், ''அரங்கத்து இன்னமுதர்; குழல் அழகர் வாய் அழகர்; கண் அழகர்; கொப்பூழில் எழு கமலப் பூ அழகர்; எம்மானார்'' என்று அவள் பாடிய ஸ்ரீரங்கநாதனிடமே முற்றிலும் ஈடுபட்டிருந்தன.

ஆலய வாயிலில் சிவிகை நின்றதும், சிவுக்கென அதிலிருந்து புறப்பட்டாள் ஆண்டாள். வில்லிலிருந்து புறப்பட்ட பாணம் போல் வில்லிப்புத்தூர் விளக்கான கோதை நேரே ரங்கநாதன் சந்நிதிக்கு விரைந்தாள். காற் சிலம்பும் கைவளையும், ஹாரங்களும், குண்டலமும் கிலுகிலுக்கக் கர்ப்பக் கிருகத்துக்குள் விருவிருவென நுழைந்தாள்.

அவ்வளவுதான்! உடனே அரங்க நாதர் விக்கிரகத்திலிருந்து ஒரு பிரகாசமான ஜோதி எழுந்தது. சந்நிதி முழுவதும் அந்தப் பேரொளி பரவியது.

ஆண்டாளின் திருமேனி அந்தப் பேரொளியில் கரைந்து அப்படியே ரங்கநாதனுக்குள் அடங்கிவிட்டது.

வைகுண்ட லோகத்தில் விஷ்ணுபகவான் இரு கைகளையும் நீட்டிக் கோதையை ''வா, வா!'' என வரவேற்றார். அவருக்குப் பக்கத்தில் அமர்ந்துள்ள பூமாதேவியோடு ஐக்கியமாகிவிட்டாள் நம் ஆண்டாள்!


கண்ணனைக் கல்யாணம் செய்து கொள்வது ஆண்டாள் போன்ற அபூர்வப் பிறவிகளுக்குத்தான் சாத்தியமானது. ஆனால் நம்மைப் போன்ற சாமானிய மக்களும்கூட இந்தத் திருப்பாவைப் பாடல்களைப் பாராயணம் செய்தால் நாம் 'எங்கும் திரு அருள் நிறையப் பெற்று இன்புற்று வாழ்வோம்' என்று ஆண்டாளே கூறுகிறாள். மேலும் பாவைப் பாடல்களைப் பாடுவதால் நல்ல மழை பொழிந்து நாடும் செழிக்கும் என்கிறாள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்!



ராஜாஜித் தாத்தாவை வரைந்து பாருங்கள்!


—தாணு



அடுத்த இதழில் யார்?


சிரிக்கச் சிரிக்க...!


சாமா



"மணி ஏன் இப்படி நடை போடுகிறான்?"

"ஏக விலை கொடுத்து பூட்ஸ் வாங்கி இருக்கிறானாம். இட்டக் கிட்டக் காலை வச்சு நடந்தால் சீக்கிரம் தேய்ந்து விடுமென்று அப்படி நடக்கிறான்!"





"ஏண்டா சேகர்! அந்த வண்டிக்காரன் குதிரைமீது சாய்ந்து கொண்டிருக்கிறானே, ஏன்?"


"குதிரை கீழே விழுந்து விடாமல் இருக்கவோ என்னவோ?"



"இந்தாடா ஒரு பட்சணம். இந்தப் புது மூக்குக் கண்ணாடி எல்லாத்தையும் பெரிசு பெரிசாக் காட்டறது!"

"அப்போ எனக்குப் பட்சணம் கொடுக்கும்போது கண்ணாடியைக் கழற்றி வெச்சுடு பாட்டி!"






"மூளை உள்ளவர்கள் பழமொழிகளை உண்டாக்குகிறார்கள். அது இல்லாதவர்கள் அந்தப் பழமொழிகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள்' என்று ஒரு பழமொழி இருக்கு தெரியுமோ?"

"நீங்க இதை இதுவரை பத்துத் தடவைகள் சொல்லியாச்சு என்பது தெரியுமோ?"

சைக்கிளின் கதை

கிருஷ்ணவேணி




ஸார் ப்ரானின் சவாரி யந்திரம்

தனக்கென்று ஒரு சைக்கிள் இருக்க வேண்டும் என்று விரும்பாத பையனோ பெண்ணோ இருக்க மாட்டார்கள். சைக்கிள் ஓர் அற்புதமான யந்திர சாதனம். எளிமை, திறமை மிக்க செயல் திறன், மலிவு, பாதுகாப்பதில் அதிக சிக்கல் இல்லாமை இத்தனையும் ஒருங்கே அமைந்த ஒரு சாதனம் சைக்கிள். மத்தியதர வகுப்பாருக்கு இது ஒரு வரப்பிரசாதம். இந்தச் சைக்கிளை யார் எப்படி எப்போது கண்டு பிடித்தார்கள்?

சைக்கிள் திடீரென்று ஒரு நாளில் தோன்றிவிடவில்லை. அதே மாதிரி இன்று நீங்கள் ஏறும் சைக்கிளை ஒருவர் மட்டுமே உருவாக்கிவிடவுமில்லை. பல வருஷங்களில் பலபேருடைய கற்பனைகளில் பல்வேறு விதமான அமைப்புக்களில் உருவான ஒரு சாதனம் இன்றையச் சைக்கிளாக முழுமை பெற்றிருக்கிறது. மனிதன் கால்களுக்கு ஓய்வு கொடுத்து ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் பிரயாணம் செய்ய ஏதாவது ஒரு சாதனத்தை உருவாக்க ஓயாது சிந்தித்துக் கொண்டே இருந்தான். அதன் பலனாகச் சக்கரத்தைக் கண்ட மனிதன் சக்கரங்களை அருகருகே வைத்து இரண்டையும் இருக கொண்டு இணைத்துப் பாரங்களைச் சுமக்கும் வண்டி தயாரித்தானே தவிர இரு சக்கரங்களை ஒன்றன் பின் மற்றதை வைத்து உருட்டி ஓட வைக்கும் ஓர் அமைப்பைப் பற்றி 1813ம் ஆண்டுக்கு முன்னால் யாரும் கற்பனை செய்யவே இல்லை.

ஒரு சாதாரண ஜெர்மன் அரசாங்க உத்தியோகஸ்தர் ஒரு நாள் பகல் உணவுக்குப் பிறகு பொழுது போக்காகக் கையிலிருந்த நாணயத்தை மேஜை மீது உருட்டி ஓட வைத்துக் கொண்டிருந்தார். அவர் பெயர் **டிரைஸ் ஸார் ப்ரான் (Drais Sauerbronn)** உருட்டி விடப்பட்ட நாணயம் ஒரு குறிப்பிட்ட தூரம் போய் ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழும். இதையே பார்த்துக் கொண்டிருந்த ஸார் ப்ரானுக்கு பளீரென்று ஒரு யோசனை தோன்றியது. ஒரு குறிப்பிட்ட வேகத்தில் அந்த நாணயம் உருளும்போது அது கீழே விழாமல் செங்குத்தாகவே போயிற்று. ஆனால் ஆரம்பத்தில் அதை அந்த நிலையில் வைத்துத் தள்ளத்தான் வேண்டி இருந்தது. இப்போதுதான் ஸார் ப்ரானுக்கு ஒன்றன் பின்னால் ஒன்றாக இரு சக்கரங்களை வைத்து ஓர் அமைப்பை உருவாக்கும் எண்ணம் தோன்றியது. முன் சக்கரம், போகும்



இடது: மாக்மில்லனின் சைக்கிள்
வலது: லால்மெண்டின் போன் ஷேக்கர்.

திசையைத் தீர்மானிக்கவும் பின் சக்கரத்தின் மீது மனிதன் அமர்ந்து கொண்டு சற்றே முன்னால் குனிந்தபடி அது இப்படி அப்படிச் சாயாமல் அதை நடத்திச் சென்றால் என்ன? நாணயத்தைச் சுண்டி விட்டால் அது ஒரே நேர் பாதையில் விழாமல் செல்லவில்லையா? அதே போல் இந்த அமைப்பும் வெற்றிகரமாகச் செயல்படுமானால்?

ஸார்ப்ரான் பொழுது போக்காக இயந்திரக் கலை பயின்றவர். ஆகவே எண்ணத்தில் உதித்த அந்த அமைப்பை உருவாக்கி விட்டார். மரத்தாலான இரு சக்கரங்களைச் செய்து அதை மரச் சட்டத்தினால் பிரித்து இணைத்தார். சட்டத்தின் மீது நடுவே ஒரு ஆசனத்தையும் நிறுவினார். இந்த ஆரம்ப கால சைக்கிளுக்குப் பெடல்கள் கிடையாது.

ஸார்ப்ரான் இந்த அமைப்பின் சட்டத்தின் நடுவில் உள்ள ஆசனத்தில் அமர்ந்தார். இரு கால்களும் இரு பக்கமும் தரையைத் தொட்டுக் கொண்டிருந்தன. முதலில் ஒரு காலையும் பிறகு மற்றதையும் தரையில் உதைத்து உந்தினார். சக்கரம் சுழன்று முன்னேறியது. இப்படிக் கொஞ்ச தூரம் கால்களைத் தரையில் உதைத்து முன்னுக்கு உந்தி அதை ஒரு குறிப்பிட்ட வேகத்துக்கு உருட்டி விட்டதும் இரு கால்களையும் தரையிலிருந்து தூக்கியபடி சட்டத்தில் அமர்ந்து கொள்ளுவார். அவர் உந்தி உருட்டி விட்ட வேகத்தில் அது கொஞ்ச தூரம் உருண்டபடி ஓடும். வேகம் குறையும் தருவாயில் மறுபடியும் கால்களைத் தரையில் ஊன்றி, உந்தி, உதைத்துச் செலுத்திக் கொண்டு முன்னேற வேண்டும்.

ஸார்ப்ரான் இந்த அமைப்பைச் ''சவாரி யந்திரம்'' (Riding machine) என்றழைத்தார். சாலை ஒழுங்காக இருந்தால் நடப்பதை விட நான்கு ஐந்து மடங்கு வேகமாக இதில் போகலாம். ஆனால் சொகுசான பிரயாணமாக இருக்காது. முன் சக்கரத்துடன் இணைத்துள்ள ஒரு சட்டத்தின் உதவியால், செல்லும் திசைக்கு வண்டியைத் திருப்பிக் கொள்ள முடியும். ஆனால் இதில் பிரயாணம் செய்வதினால் காலணிகள் விரைவில் தேய்ந்து போயின; கால்களைத் தரையில் உதைத்து உந்துவதினால்.

டிரைஸ் ஸார்ப்ரான் வசித்த மான்ஹீம் நகர மக்கள் இந்தப் புதிய அமைப்புக்கு ஆதரவு தந்து ஊக்குவிக்கவில்லை. டிரைஸ் இதில் சவாரி செய்வதைக் கண்டு கேலியாகச் சிரித்து அவரைக் கோமாளி என்று கிண்டலும் செய்தார்கள். ஆனால் ஸார்ப்ரானின் இந்த வினோதச் சாதனத்தைப் பற்றிய செய்திகள் பல பத்திரிகைகளில் வெளியாயின. 1816ல் ஒரு பிரெஞ்சுக்காரர் இம்மாதிரியான வாகனத்தை வியாபார ரீதியில் தயாரித்து விநியோகிக்கலானார்.


பிரிட்டனில் இம்மாதிரியான வாகனங்களை 'ஹாபி ஹார்ஸ்' — 'டாண்டி ஹார்ஸ்' என்று அழைக்கலானார்கள். ஏனென்றால் வசதி படைத்தவர்களால் தான் இவ்வண்டிகளை வாங்கி ஓட்ட—இல்லை—ஓட முடியும். இங்கிலாந்தில் பணக்கார வாலிபர்கள் இந்த டாண்டி குதிரைகளைப் பொறுப்பற்ற முறையில் வீதிகளில் ஓட்டிப் பாதசாரிகளுக்கு இன்னல் விளைவித்ததினால் இந்த வாகனங்களை வீதிகளில் ஓட்டத் தடை விதிக்கப்பட்டது. இதை ஓட்டவும் இதில் பந்தயங்கள் நடத்தவும் தனியான பாதைகளும் மைதானங்களும் அமைத்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக இதன் மீதுள்ள தடை தளர்ந்து வீதிகளில் ஓட அனுமதிக்கப்பட்டாலும் பத்து ஆண்டுகள் வரை போக்கு வரத்துக்கு ஏற்ற வாகனமாக இது கருதப்படவில்லை. பொழுது போக்குச் சாதனம் என்றே கருதப்பட்டது.


1839ல் ஸ்காட்லாந்தில் உள்ள டம்ஃபிரீஸ் என்ற ஊரைச் சேர்ந்த கருமானான **கிர்க் பாட்ரிக் மாக்மில்லன்** என்பவர் இந்த பொழுது போக்குக் குதிரை வாகனத்தில் பல மாற்றங்களைச் செய்

தார். பின் சக்கரத்தோடு இரும்பாலான இரு கரங்களை இணைத்தார். சவாரி செய்பவர் இவைகளை இப்படியும் அப்படியும் காலால் அசைப்பதன் மூலம் சக்கரத்தை இயக்கி அதைத் திருப்பப் பயன்பட்டது. ஒரு வழியாகச் சைக்கிள் சவாரி செய்பவரின் கால்கள் பூமியில் பதியாத ஒரு நிலை ஏற்பட்டது. சரிவான பாதையில் போகும்போது வேகத்தைக் கட்டுப்படுத்தப் பிரேக்குகளையும் பயன்படுத்தினார் மாக் மில்லன். முன் சக்கரத்துடன் இணைத்துள்ள கம்பிக்குப் பதிலாக ஹாண்டில் பாரையும் உருவாக்கியவர் மாக்மில்லன்தான்.

மாக்மில்லனுடைய சைக்கிளில் இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர்தான் சைக்கிளின் முன் சக்கரத்தோடு பெடல்கள் அமைக்கப்பட்டன. இதைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த **பீர் லால்மெண்ட்** (Pierre Lallmend) என்பவர். இந்தப் பெடலை ஒரு முறை சுற்றினால் முன் சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றும், இன்றையக் குழந்தைகள் மூன்று சக்கர வண்டிகளின் இயக்கத்தைப் போல. இந்த நிலையிலும் கூடச் சைக்கிளின் சக்கரங்கள் மரத்தாலானவைதான். இதற்கு இரும்புப் பட்டை — இன்றைய மாட்டு வண்டிச் சக்கரங்களுக்குப் போட்டிருப்பது போல — போடப்பட்டிருக்கும். உட்காரும் ஆசனத்துக்கு ஸ்பிரிங் இயக்கம் கிடையாது. ஆகவே இது ரஸ்தாவில் போகும்போது ஒரு சின்ன நொடியிலும் கூட உடலில் உள்ள எலும்புகள் கலகலக்கும்படி குலுக்கலும் வலியும்ஏற்படும். ஆகவே இவ்வகை வண்டிகளைப் பிரிட்டிஷ் மக்கள் 'போன் ஷேக்கர்' (Bone shaker) என்றழைத்தார்கள்.

முன் சக்கரத்தைப் பெரிதாக அமைத்தால் ஒவ்வொரு முறை பெடல் செய்யும்போதும் அதிக தூரத்தைக் கடக்கலாமே என்று சிலர் எண்ணினார்கள். தொழிற் புரட்சி ஏற்பட்டிருந்த வேளை அப்போது. **மிசாக்ஸ்** என்பவர் இந்த மிகப் பெரிய முன் சக்கரத்தையும் மிகச் சிறிய பின் சக்கரத்தையும் கொண்ட ஒரு சைக்கிளை உருவாக்கினார். அது மட்டுமல்ல. சக்கரங்களை மரத்திலிருந்து முழு இரும்புக்கே மாற்றியவரும் இவர்தான். இந்தச் சைக்கிளுக்கு 'பென்னி ஃபார்த்திங்' என்று பெயர். பிரிட்டிஷ் நாணயங்களான பென்னியும் ஃபார்த்திங்கும் போல (சிறியது பெரியது) இதன் சக்கரங்கள் இருந்ததினால் இதை வேடிக்கையாக அப்படியே அழைத்தார்கள். சக்கரங்களில் கம்பியாலான ஸ்போக்ஸ் பயன்படுத்தப்பட்டது. இரும்புச் சக்கரத்துக்குக் கெட்டியான ரப்பர் டயர்கள் பொருத்தப்பட்டன. இதில் ஏறுவதும், அமர்ந்து சவாரி செய்வதும் சங்கடமாக இருந்தது. கரடுமுரடான சாலைகளில் இது நொடியில் விழுந்து எழும்போது உடலில் தாங்க முடியாத வேதனை ஏற்பட்டது. பூமி மட்டத்திலிருந்து மிக உயரத்தில் அமர்ந்து பெடல் செய்வது வசதியாக இல்லை. தலை குப்புறக் கவிழுவதற்கான வாய்ப்புக்கள் நிறைய இருந்தன. சர்க்கஸில் வித்தை செய்யக் கூடியவரோ கட்டுமஸ்தான உடல் அமைப்பு உடைய விளையாட்டு வீரரோதான் இதன் ஆசனத்தில் அமர்ந்து இதை





இடது: இப்படியும் சைக்கிள்கள் உருவாக்கப்பட்டன.

வலது: மிசாக்ஸின் பென்னி ஃபார்த்திங்.



அடேடே! ராஜாஜித் தாத்தாவுக்கு எத்தனை சுத்தமான இதயம்?

—புகைப்படம்: டாக்டர் எஸ். பரமசிவம்
பொம்மை செய்தது யாரோ?

இயக்குவது சாத்தியம். அப்படியும் மணிக்கு இருபது மைல் வேகம்தான் போக முடியும். தவிர இதில் ஏறி உட்காருவதும் சுலபமல்ல.

சைக்கிளின் அடுத்த முன்னேற்றம், இரண்டு சக்கரங்களுக்கிடையே 'பல் சக்கரம்' (Cog wheel) அமைத்து அதைப் பின் சக்கரத்தில் அமைத்துள்ள 'காக்டு ஸ்பிண்டி' (Cogged spindle) உடன் சங்கிலியால் இணைத்துப் பெடல் செய்யும்போது தொடர்ந்து சக்கரங்கள் சுழலும்படியான இன்றைய சைக்கிளின் அமைப்புக்கு முன்னோடியான ஒரு வண்டியை உருவாக்கினார்கள். இரு சக்கரங்களும் ஒரே அளவுக்குக் கொண்டு வரப்பட்டன. இதை உருவாக்கியவர் ஸ்விட்ஜர்லாந்து நாட்டைச் சேர்ந்த **ரேனால்டு** என்பவர். இது பாதுகாப்பான பைசைக்கிள் (Safty Bicycle) என்று பெயர் பெற்றது. இதன் பிறகு பல என்ஜினியர்கள் இதில் படிப்படியாகப் பல அபிவிருத்திகளை உருவாக்கி அமைத்தார்கள். ஆசனத்துக்கு ஸ்பிரிங், சக்கரங்கள் இலகுவாக இயங்குவதற்கான 'பால் பேரிங்' என்று கொஞ்சங் கொஞ்சமாக இது பல மாற்றங்களைக் கண்டது.


அப்பழுக்கு இல்லாததாகவும் அபாயங்களற்றதாகவும் இலகுவாகச் செலுத்திச் செல்லவும் உடல் குலுக்கலினால் ஏற்படும் வலியிலிருந்து நிவாரணம் பெறவுமான ஒரு சாதனத்தை அமைத்துச் சைக்கிளைப் பூரணமாக உருவாக்கியவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த மிருகவைத்தியரான **ஜான் டன்லப்** தான்.

பள்ளிக்கூடத்தில் நடத்தும் சைக்கிள் போட்டியில் கலந்துகொள்ளும் பூஞ்சையான தம் மகனுக்கு உதவுவதற்காகச் சக்கரத்துக்கு இணைக்கப்பட்டுள்ள கெட்டியான ரப்பர் சட்டத்தை எடுத்துவிட்டுத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சப் பயன்படுத்தும் ரப்பர் குழாயைத் துண்டித்து அதன் இரு முனைகளையும் ஒட்டவைத்து வளையமாக்கினார். அதற்குள் காற்றை அடைத்துக் கெட்டியாக்கி, அந்த வளையத்தைச் சைக்கிள் சக்கரத்தின் வெளிப்பக்கமாக வைத்துக் கட்டி விட்டார் டன்லப். இதனால் குண்டு குழிகளில் விழும்போது ஏற்படும் அதிர்ச்சிகளைக் காற்றடைத்த குழாய் கிரகித்துக்கொண்டு சவாரி செய்பவருக்குத் துன்பம் தருவதைத் தடுத்தது. இந்தச் சிறிய மாற்றம் சைக்கிளை ஏழை எளியவர்களின் மகத்தான சாதனமாக்கி அதன் மதிப்பைப் பல மடங்கு உயர்த்தி விட்டது. இது 1889ல்.

டிரைஸ் ஸார்ப்ரான் ஒரு கிறுக்கு என்று மதிக்கப்பட்டே 1851ம் ஆண்டு ஜெர்மனியில் மரணமடைந்தார். ஆனால் ஸார்ப்ரான் தாம் ஓர் அரசாங்க ஊழியர் என்பதை விட முழுநேரக் கண்டு பிடிப்பாளர் என்ற நினைப்புடன்தான் கண்களை மூடினார். நவீன போக்குவரத்தின் சரித்திரத்தில் அருகருகே சக்கரங்களை இணைப்பதிலிருந்து மாறுபட்டு ஒன்றன் பின்னால் இன்னொரு சக்கரத்தை வைத்து ஒரு வாகனத்தை உருவாக்க முன்னோடியான ஒரு சாதனத்தை அமைத்துக் காட்டியதற்காக டிரைஸ் ஸார்ப்ரானுக்கு நிச்சயமாக ஒரு புகழ் மிக்க இடம் உண்டு.

ஸார்ப்ரானை இன்றைய சைக்கிளின் தந்தை என்றே கூடச் சொல்லலாமே.


மூளைக்கு வேலை



☐ கிட்டுவும் பட்டுவும் பெரிய மணிக் கூண்டுக்கு அருகில் போனபோது அதன் கடிகாரம் ஆறு மணி அடித்தது. கிட்டு தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி அடித்து முடிக்க முப்பது விநாடிகள் ஆயின. இதைப் பட்டுவிடம் கூறிய கிட்டு 'பன்னிரண்டு மணி அடிக்க எத்தனை விநாடிகள் ஆகும்?' என்று கேட்டான். பட்டு உடனே 'அறுபது விநாடிகள்' என்றான். ஆனால் அவன் கூறியது தவறு. எத்தனை விநாடிகள் ஆகும் என்று உங்களால் கூற முடியுமா ?

விடை: பன்னிரண்டு மணி அடிக்க அறுபத்தாறு விநாடிகள் ஆகும். முதல் மணிக்கும் ஆறாவது மணிக்கும் இடையே ஐந்து இடைவெளிகள் உண்டு. ஒவ்வொரு இடைவெளியும் ஆறு விநாடிகளைக் கொண்டது. அதேபோல் ஒன்றிலிருந்து பன்னிரண்டு மணிவரை ஒலிக்கப் பதினொரு இடைவெளிகள். ஓர் இடைவெளிக்கு ஆறு விநாடிகள் ஆக 11×6 = 66 விநாடிகள்.

☐ தவளை ஒன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அதன் ஆழம் 30 அடிகள். தவளை பகலெல்லாம் மூன்றடி தூரம் ஏறினால் இரவில் இரண்டடி சறுக்கி விழுந்துவிடும். அப்படியும் அது தன் முயற்சியைக் கைவிடவில்லை. கொஞ்ச நாளில் அது கிணற்றிலிருந்து வெளியே வந்துவிட்டது. கரையேற அதற்கு எத்தனை நாட்கள் ஆகி இருக்கும் ?



விடை: முதல் நாள் இரண்டடி சறுக்கி விழ, இரண்டாம் நாள் நான்கடி ஏறி இருக்கும். இப்படியே 28ம் நாள் அது (27+3) 30 அடிகளையும் முக்கி முனகி ஏறி இருக்கும். இப்போது அது கிணற்றின் மேலே (கரையேறி) வந்துவிட்டதால் சறுக்கி விழ வகையில்லை. ஆகவே தவளை கரை ஏற 28 நாட்கள் ஆகி இருக்கும்.



☐ கந்தன் ஒரு தோப்புக்குச் சொந்தக்காரன். அங்கு மா, கொய்யா, சப்போட்டா மரங்கள் இருந்தன. தோப்பில் மூன்றில் ஒரு பகுதி மா மரங்கள். நாலில் ஒரு பகுதி கொய்யா மரங்கள். சப்போட்டா மரங்களோ முப்பது இருந்தன. அப்படியானால் கந்தனின் தோப்பிலிருந்த மொத்த மரங்கள் எத்தனை ?

விடை: மூன்றில் ஒரு பாகத்தையும், நான்கில் ஒரு பாகத்தையும் சேர்த்தால் 7/12 வருகிறது. மீதி 5/12. பன்னிரண்டில் ஐந்துபாகம் சப்போட்டா. அது 30 மரங்கள். அப்படியானால் முழுத்தோப்பிலும் உள்ள மரங்கள் 12/5 × 30 = 72 மரங்கள்.

☐ கறுப்பனுக்கு இரண்டு பிள்ளைகள். மூக்கன், காத்தான் என்று பெயர். மூவரும் தச்சு வேலை செய்பவர்கள். கறுப்பனும் மூக்கனும் சேர்ந்து போனால் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய் சம்பாதிப்பார்கள். கறுப்பனும் காத்தானும் சேர்ந்து போனால் ஒரு நாளைக்கு ஒன்பது ரூபாய் கூலி கிடைக்கும். மூக்கனும் காத்தானும் மட்டும் போனால் ஒரு நாள் கூலி ஏழு ரூபாய் தான். அப்படியானால் ஒவ்வொருவரின் தினக் கூலி என்ன ?



விடை: கறுப்பனும் காத்தானும் சேர்ந்து வேலை செய்வதைவிட, கறுப்பனும் மூக்கனும் சேர்ந்து வேலை செய்யும்போது ஒரு ரூபாய் அதிகம் கிடைக்கிறது. ஆகவே மூக்கன் காத்தானைவிட ஒரு ரூபாய் அதிகம் பெறுகிறான் என்றாகிறது. இரு பிள்ளைகளும் மட்டும் வேலை செய்தால் கூலி ஏழு ரூபாய். ஆகவே மூக்கனுக்குக் கூலி ரூ. 4 காத்தானுக்குக் கூலி ரூ. 3 கறுப்பனுக்குக் கூலி ரூபாய் ஆறு.

சூரிய சக்தி

சூரியமண்டலத்துக்கு யாராலும் போக முடியாது. ஆனால் விஞ்ஞானிகள் சூரியனைப் பற்றிப் பல உண்மைகளை ஆராய்ச்சிமூலம் அறிந்து கூறியிருக்கிறார்கள்.

□ சூரியன் என்பது ஒரு மஞ்சளான நட்சத்திரம். அதன் குறுக்களவு: 865,000 மைல்கள். சூரிய உருண்டை 'போலாக' இருந்தால் அதனுள்ளே இந்த பூமியைப் போல 13,00,000 பூமிகளை அடைக்க முடியும். தன்னைச் சுற்றி வரும் கிரகங்கள், சந்திரன்கள், ஆஸ்டிராய்டுகள், காமெட்டுகள் மெடார்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தால் எவ்வளவு இருக்குமோ அதைப் போல 700 மடங்கு பெரியது சூரியன்.

□ பூமியைப் போல 3,30,000 மடங்கு அதிக கனமுடையது சூரியன். ஒரு பையன் பூமியில் நிறுக்கும்போது அவன் நிறை 100 பவுண்டுகள் இருக்குமானால் அவனையே சூரியனில் - நிறுத்தால் ஒன்னரை டன்கள் இருப்பான்.

□ சூரியனுடைய மத்தியில் அதன் உஷ்ணம் 3,00,00,000 டிகிரிகள் ஃபாரன்ஹீட். மேல் பரப்பில் 11,000 டிகிரிகள் ஃபாரன்ஹீட். அதிசயம் என்னவென்றால் சூரியனைச் சுற்றியுள்ள 'கொரோனா' (Corona) என்ற பகுதியின் உஷ்ணம் 10,00,000 டிகிரிகள் ஃபாரன்ஹீட்.

□ சூரியனின் மேற்பரப்பிலிருந்து எரியும் தீநாக்குகளுக்கு பிராமிநன்ஸஸ் (Prominences) என்று பெயர். ஒருவகை எரிவாயுக்களினால் இவை கொழுந்து விட்டு எரிகின்றன. இவ்வாயுக்கள் சூரியனின் மேல் பரப்பிலிருந்து 1,00,000 மைல்களுக்கு உமிழப்பட்டுப் பிறகுதான் தீஜ்வாலைகளாக எரிகின்றன.

□ சூரியப் புள்ளிகள் என்பது சூரியப் பரப்பின் மீது ஏற்படும் புயல்கள். ஒரு பெரிய சூரியப் புள்ளி டஜன் கணக்கில் பூமிகளை 'ஸ்வாஹா' செய்யக்கூடிய வலிமை மிக்கவை. சூரியப் பரப்பிலுள்ள உஷ்ணத்தைவிடச் சூரியப் புள்ளிகளின் உஷ்ணம் 3,000 டிகிரிகள் குறைவாகவே இருக்கும். சூரியப் புள்ளிகள் பதினோரு ஆண்டுச் சுழற்சியில் உருவாகின்றன.

□ சூரியன் தன்னுடைய அச்சில் சுழன்று கொண்டிருக்கிறது. சூரியன் ஒரு திடப் பொருளில்லாததால் இதன் சில பாகங்கள் மற்றதை விட வேகமாகச் சுழல்கின்றன. மத்தி 25 நாட்களுக்கு ஒரு தடவையும் உச்சி 33 நாட்களுக்கு ஒரு தடவையுமாகச் சுழலுகிறது.

□ பூமியில் ஏராளமான ரசாயனப் பொருள்கள் காணப் படுகின்றன இல்லையா? ஆனால் சூரியனில் அவை எதையும் காண முடியாது. சூரியன் 95 சதவிகிதம் ஜல வாயுவினாலும் ஹீலியம் என்ற வாயுவினாலும் ஆக்கப்பட்டுள்ளது. ஒரு ஹைட்ரஜன் குண்டில் எப்படி சக்தி உற்பத்தி செய்யப்படுகிறதோ அப்படியேதான் சூரியனிலும் சக்தி உற்பத்தியாகிறது. ஹைட்ரஜன் ஹீலியமாக மாற்றப்படுகிறது. ஒவ்வொரு நிமிஷமும் 564 மிலியன் டன்கள் (மிலியனுக்கு பத்து லக்ஷம்) ஜலவாயு 560 மிலியன் டன்கள் ஹீலியம் வாயுவாக மாற்றப்படுகிறது. ஒரு நிமிஷத்துக்கு 4 மிலியன் டன் ஜலவாயுவை இழந்து கொண்டிருக்கிறது. இதிலுள்ள ஜலவாயு இப்படி ஏராளமாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும்கூட சூரியனில் ஏராளமான ஜலவாயு இருக்கிறது. எவ்வளவு தெரியுமா? ஒரு ஆக்டலியனும் 494 செப்டலியன் டன்கள் நிறை. (ஆக்டலியனுக்கு பத்து லட்சத்துடன் 21 பூஜ்யங்களையும் செப்டலியனுக்கு 18 பூஜ்யங்களையும் சேர்த்துக் கணக்கிடவும்) பல பில்லியன் (நூறு கோடி) ஆண்டுகள் இப்படியே எரிவதற்கான அத்தனை ஜலவாயு இருக்கிறது இங்கே.

□ சூரியன் வெளியிடும் சக்தியில் 2,000,000,000-ல் ஒரு பங்குதான் பூமிக்கு வருகிறது. அதையே நம்மால் தாங்க முடியாமல் 'உஸ்' 'உஸ்' என்கிறோம்.

□ சூரியன் தன்னுடைய வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் திடீரென நிறுத்திக் கொண்டால் பூமியிலுள்ள அத்தனை நிலக்கரி, பெட்ரோல் மற்றும் எரிபொருள்கள் என்னென்ன உண்டோ அத்தனையையும் பயன்படுத்தி இப்போதுள்ளது போலவே பூமியைக் கதகதப்பாக மூன்றே நாட்களுக்குத்தான் வைத்துக் கொள்ள முடியும்.

□ சூரிய கிரணங்களை சோலார் பாட்டரிகளைக் கொண்டு நேரடியாகப் பயன்படுத்தும் மின்சார சக்தியாக மாற்ற முடியும்.

கடலில் புதையல்!

பூமியில் எப்படி தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள், உலோகங்கள், உப்புக்கள் எல்லாம் கிடைக்கின்றனவோ, தானியங்கள், பழ வகைகள், காய்கறிகள் எல்லாம் விளைகின்றனவோ அப்படியே கடலும் அள்ள அள்ளக் குறையாத செல்வங்களைக் கொண்டதோர் புதையல்தான்.

உணவுப் பொருள்களின் இருப்பிடம் கடல். செம்படவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கடலிலிருந்து அறுபது பில்லியன் (நூறு கோடி) பவுண்டுகள் நிறையுள்ள மீன்களை எடுக்கிறார்கள். இதைத் தவிர ஏராளமான கிளிஞ்சல், சிப்பி, மட்டி ஆகியவை எடுக்கப்படுகின்றன. கடலில் ஏராளமான தாவரங்கள் விளைகின்றன. கடல் பாசி, புல், பூண்டு, செடி, கொடிகள் இவைகளையும் உணவுப் பொருள்களாக மாற்றும் ஆராய்ச்சி நடந்து வருகிறது. பிற்காலத்தில் கடல் தாவர உணவுகளாக இவை ஏற்கப்படலாம்.

திமிங்கிலம், ஸீல்கள், வால்ரஸ்கள் ஆகியவையும் மனிதர்களின் உணவாகின்றன. திமிங்கிலத்திலிருந்து விலை மதிப்புடைய எண்ணெய் கிடைக்கிறது. அதன் எலும்பும் பயன்படுகிறது தந்தமாக. ஸீலின் தோல் ஏராளமான விலையுடையது. வால்ரஸின் தந்தம் யானையின் தந்தத்தைப் போலவே மதிப்புடையது. கதகதப்பான கடல்களிலிருந்து கடல் பஞ்சுகளை ஏராளமாகச் சேகரிக்கிறார்கள். முத்தும் பவழமும் கடலின் செல்வம் என்று உங்களுக்குத் தெரியும்.

கடல் நீரில் ஏராளமான ரசாயனப் பொருள்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கன மைல் கனபரிமானக் கடல் நீரிலும் 175 மில்லியன் டன் நிறையுள்ள ரசாயனப்பொருள்கள் இருக்கின்றன. அதன் மதிப்பு 5 பில்லியன் டாலர்கள். இதில் முக்கியமானது கடலுப்புத்தான். மற்ற ரசாயனங்கள் பின்வருவனவற்றின் கூட்டுப் பொருள்களாகக் கிடைக்கின்றன. மக்னீஷியம், கந்தகம், கால்ஷியம், பொட்டாஷியம், இரும்பு, தாமிரம், ஈயம், மோலிப்டினம், வெள்ளி, வனடியம், நிக்கல், பாதரஸம், தங்கம்...


ஒரு கியூபிக் மைல் கன பரிமாணக் கடல் நீரில் நாலு மில்லியன் டன்னுக்கும் மேலான மக்னீஷியம் உள்ளது. கடல் நீரிலிருந்து உப்பைப் போலவே இதுவும் பெருமளவில் எடுக்கப்படுகிறது.


உலகத்தின் தேவையில் 99 சதவிகிதம் புரோமைன் கடலிலிருந்து தான் எடுக்கப்படுகிறது. 2000 காலன் கடல் நீரில் ஒரு பவுண்டு புரோமைன் கிடைக்கும்.


உலகின் கடல்கள் எல்லாவற்றின் நீரையும் காய்ச்சி வடித்துப் பிரித்தால் 830 மில்லியன் டன்கள் தங்கம் கிடைக்கும். இன்றைய மார்க்கெட் விலையில் அதன் மதிப்பைக் கணக்கிட்டுப் பார். இந்தத் தங்கத்தை எடுத்து உலகிலுள்ள ஜனங்கள் அத்தனை பேருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒவ்வொருவருக்கும் 700 பவுண்டு தங்கம் கிடைக்கும். ஒவ்வொருவருமே கோடீசுவரர்களாகிவிடலாம். ஆனால்... கடல் நீரிலிருந்து தங்கத்தைப் பிரிக்க ஆகும் செலவு அதன் மதிப்பை விட அதிகமாகும். அதனால்தான் மனிதன் கடல் நீரைக் காய்ச்சி வடிக்கவில்லை! ஐந்து மில்லியன் கியூபிக் (கனபரிமாண) கெஜமுள்ள கடல் நீரிலிருந்து கிடைக்கக் கூடிய தங்கம் எவ்வளவு தெரியுமா? அரை அவுன்ஸ்!

தொடர்ந்து உலோக உப்புக்களை நதிகள் கடலில் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் நதிகள் மூலம் கடலில் வந்து சேரும் உலோக உப்புக்களின் அளவு என்ன தெரியுமா? 160 மில்லியன் டன்கள்.

கடலில் மூழ்கும் கப்பல்களிலுள்ள ஆஸ்திகளெல்லாம் கடலுக்குத்தானே சொந்தம்? இந்த வகையிலும் — இது மிகக் குறைவுதான் என்றாலும் — ஏழு கடலும் கொஞ்சம் செல்வத்தைக் கொடுக்கிறது.







அது ஒரு ரகசியம்

• தரஜா •

காட்டில் வசித்து வந்த மிருகங்கள், பறவைகள் எல்லாம் வசந்தத்தின் வருகையை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றுக் குதூகலத்துடன் கொம்மாளம் போட்டுக் கொண்டிருந்தன. ஆனல் காக்கைத் தம்பதிகள் மட்டும் மிகவும் சோகத்துடன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு வேப்ப மரத்தின் கிளையில் உட்கார்ந்திருந்தன.

அப்போது அந்தப் பக்கமாக வந்த நரி, ஆண் காக்கையைப் பார்த்து, ''என்ன கறுப்பண்ணு! ஏன் சோகமாக இருக்கிறீர்?'' என்று விசாரித்தது.

''கவலைதான் காரணம்!'' என்று பதிலளித்தது காக்கை.

''என்ன கவலை உமக்கு இப்போது?''

''பெண்ணைப் பெற்ற கவலைதான். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டாமா ?''

''உம்ம இனத்திலே மாப்பிள்ளைகளுக்கா பஞ்சம் ? நீர் வாயைத் திறந்து 'கா!' என்று ஒரு தடவை கூவினல் போதுமே ஆயிரம் பசங்கள் வருவார்களே.....!''

''மாப்பிள்ளைப் பசங்களுக்குக் குறைவில்லைதான். இதுவரை இருபது பேர்கள் வந்து பெண் பார்த்து விட்டுப் போய்விட்டார்கள். ஆனல் ஒருத்தருக்காவது என் பெண்ணைப் பிடிக்கவில்லையே?.....''

''பிடிக்காமல் போவானேன் ?''

''என் பெண் நிறம் கொஞ்சம் வெளுப்பு. 'பெண் நல்ல கறுப்பாக இல்லையே!' என்று சொல்லி ஒதுக்கி விட்டான்கள் அத்தனை பேரும்!''

நரி இதைக் கேட்டு 'இடி இடி' என்று சிரித்தது. '' கறுப்பண்ணு! நிறத்திலே என்ன இருக்கிறது ? குணம் தானே முக்கியம் ஒரு பெண்ணுக்கு?....''

'' அது உனக்கும் எனக்கும் தெரிகிறது! ஆனல் இந்தக் காக்காப் பசங்களுக்குத் தெரியக் காணேமே!'' என்ற கறுப்பண்ணன் ''என் பெண்ணின் நிறத்தைக் கொஞ்சம் மாற்றுவதற்கு நீதான் ஒரு வழி சொல்லேன் !'' என்று கேட்டுக் கொண்டது.

''இதென்ன பிரமாதம்! நாளைக்கே உன் பெண்ணை அழைத்துக் கொண்டு கரடி வைத்தியரிடம் போ. அவர் ஏதாவது களிம்பு கொடுப்பார். அதை வாங்கித் தடவிக் கொள்ளச் சொல் உன் பெண்ணை. நிறம் மாறுகிறதா இல்லையா பார்!'' என்ற நரி, கறுப்பண்ணனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றது.

அதன்படியே கரடி வைத்தியரைப் பெண் சகிதம் போய்ப் பார்த்தது கறுப்பண்ணன்.

''உம்ம பெண் நிறத்தை மாற்ற வேண்டும் என்று சொல்கிறீர்...? நீரே கொஞ்சம் வெளுப்புதான். அதனல்





தான் உம்முடைய பெண்ணும் வெளுப்பாக இருக்கிறாள்! எதற்கும் பதினைந்து நாட்களுக்கு இரவில் படுக்கப் போகும்போது உடம்பில் இந்தக் களிம்பைப் பூசிக்கொள்ளச் சொல்லும் !'' என்று ஒரு கொட்டாங்கச்சியில் கன்னங்கரேல் என்றிருந்த களிம்பை வைத்துக் கொடுத்தது கரடி.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு கறுப்பண்ணனைச் சந்தித்தது நரி.

'' என்ன கரடி வைத்தியம் எந்தமட்டில் இருக்கிறது ?'' என்று விசாரித்தது.

'' அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்?.... அந்தக் களிம்பைத் தடவிக் கொண்டதில் என் பெண்ணுக்கு உடம்பெல்லாம் திட்டுத் திட்டாக வெளுத்துவிட்டது..!''


'' சரி, கரடி கொடுத்த களிம்பைத் தூக்கிக் குப்பையிலே போடு...! கஜேந்திரன் என்று தோல் ஸ்பெஷலிஸ்ட் ஒருவர் இருக்கிறார் தெரியுமல்லவா உனக்கு?.... அவர் கிட்டே உன் பெண்ணை அழைத்துக் கொண்டு போ!''

மறு நாளே கஜேந்திரனிடம் போய் நின்றது கறுப்பண்ணன். கஜேந்திரன் பருமனான மூக்குக்கண்ணாடியைப் போட்டுக் கொண்டு, கனமான புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தது. பிறகு, '''சிறுத்தை கிளினிக்'கில் போய் உம்ம பெண்ணின் ரத்தத்தைப் பரிசோதனை பண்ணிக் கொண்டு வாரும்!'' என்று விரட்டியது. ரத்தப் பரிசோதனை 'ரிப்போர்ட்டு'டன் கறுப்பண்ணன் மறுபடி போய் நின்றபோது, அறிக்கையை நுனித் துதிக்கையால் வாங்கி அலட்சியமாகப் பார்த்து விட்டு, ''நான் நினைத்தது தான்!'' என்று அபிப்பிராயம் சொல்லிவிட்டு முழ நீளத்துக்கு மருந்துச்சீட்டு ஒன்றை எழுதிக் கொடுத்தது.

'' உம்ம பெண் இந்த மருந்துகளையெல்லாம் நேரம் தவறாமல் சாப்பிட வேண்டும். பதினைந்து நாட்களுக்குப் பிறகு மறுபடி என்னை வந்து பாரும் !'' என்றது கஜேந்திரன்.

ஸ்பெஷலிஸ்ட் எழுதிக் கொடுத்த மருந்துகளைக் காட்டில் மூலைக்கு மூலை தேடி வாங்கி வந்தது கறுப்பண்ணன். பெண்ணைத் தவறாமல் மருந்து சாப்பிடவும் வைத்தது.





ஒரு மாதம் கழித்து ஏதோ வேலையாகக் கறுப்பண்ணன் வீட்டுப் பக்கம் நரி வரவே உள்ளே நுழைந்தது. கறுப்பண்ணன் தலையில் துணியைப் போட்டுக் கொண்டு முடங்கிப் படுத்திருப்பதைப் பார்த்ததும் "என்ன ஐயா சமாசாரம்?" என்று விசாரித்தது.

"நல்ல ஸ்பெஷலிஸ்ட்டைச் சிபாரிசு செய்தீர் போம்!" என்று அலுத்துக் கொண்ட கறுப்பண்ணன் "என் பெண்ணின் நிறமே அடியோடு மாறிவிட்டது ஐயா!" என்றது.

"மாறிவிட்டதா! பேஷ் பேஷ்!.... டாக்டரின் மருந்துகள் அபார பலனைத் தந்திருக்கின்றன என்று சொல்லும்!"

"நாசமாய்ப் போச்சு! 'நிறம் மாறிவிட்டது' என்றால் என் பெண் கறுப்பாகப் போய்விட்டாள் என்று அர்த்தம்......? அவள் உடம்பு பால் போல் வெளுத்துப் போய்விட்டது."

"நிஜமாகவா?"

"ஆமாம்!... வெளியே தலை காட்டவே முடியவில்லை அவளால்....இப்படி வெள்ளை வெளேர் என்று ஒருத்தி இருந்தால் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் அவளைக் கேலி பண்ணாமல் இருப்பார்களா?.... அது பொறுக்க முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடைக்கிறாளாக்கும் என் பெண்!"

நரி மோவாயைத் தடவிக் கொண்டு யோசித்தது.

"சரி இன்னொரு தரம். முயற்சி பண்ணிப் பார்ப்போம். அதில் நிச்சயம் பலன் கிடைக்கும் என்றே நம்புகிறேன்!" என்றது.

"இந்த முறை எந்த வைத்தியரிடம் அனுப்பப் போகிறாய்?"

"வைத்தியர் இல்லை..... என் வீட்டுக்குத்தான் அழைத்துக் கொண்டு போகப் போகிறேன் உன் பெண்ணை!"

"உனக்கு வைத்தியம்கூடத் தெரியுமா என்ன?"

"என் மனைவிக்குக் கை வைத்தியம் கொஞ்சம் தெரியும். உன் பெண் எங்க வீட்டிலே ஒரு மாதம் இருக்கட்டும். அப்புறம் பார்ப்போம். என் மனைவி நிச்சயம் உன் பெண்ணைக் கறுப்பாக்கிக் காட்டுவாள். கவலைப்படாதே!"


இதற்குச் சம்மதித்து கறுப்பண்ணன் தன் பெண்ணை நரியின் வீட்டுக்கு அனுப்பி வைத்தது.

ஒரு மாதம் கழிந்தது. அப்புறம் திடீரென்று ஒரு நாள் நரி கறுப்பண்ணனின் பெண்ணை அழைத்துக் கொண்டு கறுப்பண்ணனின் வீட்டுக்கே வந்து சேர்ந்தது.

தன் பெண்ணைப் பார்த்த கறுப்பண்ணனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை! அந்தப் பெண் அத்தனை கறுப்பாகக் காட்சியளித்தது!

"உன் பெண்ணைக் கறுப்பாக்கி ஒப்படைத்து விட்டேன் உன்னிடம். சீக்கிரமே அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைத்துவிடு!" என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டது நரி.

கறுப்பண்ணன் மளமளவென்று அலைந்து மாப்பிள்ளையைத் தேடிப் பிடித்தது. "உங்கள் பெண்ணின் நிறமே எங்களைக் கவர்ந்து விட்டது. சீர் செனத்திகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் போதும்!" என்று பிள்ளை வீட்டாரும் தாராள மனத்துடன் சொல்லி விட்டார்கள்.



விரைவிலேயே கறுப்பண்ணனின் மகளுக்கு 'ஜாம் ஜாம்' என்று கல்யாணமும் நடந்தது.

கல்யாண விருந்தைச் சாப்பிட்டு விட்டுக் கறுப்பண்ணன் கட்டிக் கொடுத்த பட்சணப் பொட்டலத்துடன் நரி தன் மனைவியுடன் வீடு திரும்பியதும் "ஆமாம், அதென்ன என்கிட்டக் கூட நீ அந்த ரகசியத்தைச் சொல்லவில்லையே இதுவரை?... எப்படி அந்த வெளுப்புப் பெண்ணை அட்டைக் கரியாக ஆக்கினாய்?" என்று விசாரித்தது நரி.

"அது ரொம்ப சுலபமாச்சே!" என்றது நரியின் மனைவி.

"அந்தப் பெண் இங்கிருந்தபோது தினமும் அரை மூட்டை அடுப்புக் கரியைத் தேய்த்து உடம்பில் பூசிக் கொள்ளச் சொன்னேன். அதுவும் அப்படியே தவறாமல் செய்து வந்தது. ஒரு மாசம் இப்படிப் பண்ணவே அதன் நிறமும் அட்டைக் கரியாகவே ஆகிவிட்டது!" என்று ரகசியத்தைப் போட்டு உடைத்தது.

"அடிப் பாவி!.... மாப்பிள்ளை வீட்டுக்குப் போய் அந்தப் பெண் குளித்தாளானால் பூசின கரியெல்லாம் அழிந்துபோய், வெள்ளை நிறம் வெளியே தெரிந்துவிடாதா? இப்படி முட்டாள் தனமாகக் காரியம்பண்ணி விட்டாயே?"

"எனக்கு முன் யோசனை கிடையாதா என்ன?.... நான் அந்தப் பெண்ணிடம் ஒரு ரகசியத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகுதானே இந்த வைத்தியத்தைப் பண்ணினேன்...."

"அதென்ன ரகசியம்?"

"காக்கைகள் இனத்திலே யாருமே குளிக்கிற வழக்கமில்லை என்கிற ரகசியம்தான்!" என்றது நரியின் மனைவி.

நரிக்குத் தன் மனைவியைப் புகழ வார்த்தைகளே கிடைக்கவில்லை!



901. விக்டோரியா நீர் வீழ்ச்சி எங்குள்ளது ?

902. உன் அப்பா விளையாடும் சீட்டுக் கட்டில் மொத்தம் எத்தனை கார்டுகள் இருக்கின்றன என்று தெரியுமா ?

903. தண்ணீரின் கொதி நிலை — 109, 215, 204, 212 — டிகிரி ஃபாரன் ஹீட் இவைகளில் எது சரி ?

904. கீழ்க்கண்ட உலோகங்களுள் மிகவும் கனமானது எது? தங்கம், பிளாட்டினம், ஈயம், தாமிரம்.

905. 'எண்டவர்' என்ற கப்பலில் பிரயாணம் செய்தவர் — வாஸ்கோட காமா, காப்டன் குக், ஸர் பிரான்ஸிஸ் டிரேக், கிறிஸ்தஃபர் கொலம்பஸ் இவர் களில் யார் ?

906. காஸவா (Cassava) என்பது தாது உப்பு, காய்கறி, மிருகம், ஒரு பழம் — இவற்றில் எது சரி ?

907. நள்ளிரவுச் சூரியன் நாடு — land of the Midnight Sun என்று எந்த நாட்டுக்குப் பெயர் ?

908. உலகின் தென்கோடியிலுள்ள நகரம் — ப்யூனஸ் ஐரஸ், கேப் டவுன், ரியோடி ஜனீரோ, ஹோபார்ட்—இவை களில் எது தெரியுமா?

909. 32 டிகிரி ஃபரன் ஹீட்டுக்குச் சமமான செண்டிகிரேடு எவ்வளவு?

910. நவரத்தினங்களில் ஒன்றான 'ரூபி' (ஆங்கிலச் சொல் இது) யின் நிறம் என்ன தெரியுமா ?

911. கீழே உள்ளவைகளில் எது ஏரியல்ல — சுபீரியர், மிச்சிகன், அமே ஸான், நயாஸா.

912. ஐஸ்கிரீம் சாப்பிட ஆர்டர் தரும்போது, 'வனிலா கொண்டு வா' என்கிறாயே வனிலா என்றால் என்ன?

913. ஆப்பிரிக்காவின் நீளமான நதி இவைகளில் எது? காங்கோ, நைல், ஸாம்பஸி, நிகர்.

914. கீழ்க்கண்ட தீவுகளில் எந்தத் தீவு மிகப் பெரியது? எல்பா, கிரீட், மடகாஸ்கர், மரீஷியஸ்.

915. வெண்கலம் தயாரிக்கப் பயன் படும் உலோகங்கள் எவை எவை ?

916. டிங்கோ (Dingo) என்பது எந்த வகையான பிராணி?

917. ஒரு மீட்டரின் நீளம் எவ்வளவு?

918. ஒரு ஃபாதம் (Fatham) என்பதன் அளவு என்ன ?

919. எஸ்கிமோக்களின் வீட்டுக்கு என்ன பெயர் தெரியுமா ?

920. ஐரோப்பாவுக்கும் அமெரிக்கா வுக்கும் இடையே உள்ள கடலின் பெயர் என்ன ?

921. மோட்டாரைப் பயன்படுத் தாத போது நிறுத்தி வைக்குமிடத்துக்கு காரேஜ் என்று பெயர். அதே மாதிரி விமானத்தை நிறுத்துமிடத்துக்கு?

922. காண்ட்ராபாண்டு (Contra-band) என்றால் என்ன ?

923. அர்ஜண்டினாவின் அரசாங்க மொழி எது ?

924. கியூபா தீவு — கருங் கடலில், கரீபியன் கடலில், செங்கடலில், தென் கடலில் உள்ளது. இதில் எது சரி ?

925. கிரிக்கெட் பிட்சின் நீளம் எவ்வளவு ?

926. சூரியனுக்கு மிக அருகேயுள்ள கிரகம் எது ?



விடைகள் : 901. தெற்கு ரொடீஷியாவில். 902. ஐம்பத்திரண்டு (ஜோக்கர் இல்லாமல்). 903. 212 டிகிரி ஃபாரன்ஹீட். 904. பிளாட்டினம். 905. காப்டன் குக். 906. காய்கறி 907. நார்வே நாட்டுக்கு. 908. டாஸ்மேனியாவில் உள்ள ஹோபார்ட் (Hobart). 909. 0° டிகிரி செண்டிகிரேடு. 910. சிவப்பு. 911. அமேஸான் நதி. மற்றவை ஏரிகள். 912. ஒரு வகை எண்ணெய் வித்து. இதிலிருந்து ஒரு வகை வாசனைப் பொருள் தயாரிக்கிறார்கள். அந்த எஸென்ஸுக்கு 'வனிலா' என்று பெயர். 913. நைல் நதி. 914. மடகாஸ்கர். 915. தாமிரமும் வெள்ளீயமும். 916. ஆஸ்திரேலியாவிலுள்ள காட்டு நாய். 917. 39·37 அங்குலங்கள். 918. ஆறு அடிகள். 919. இக்லூ (Igloo) 920. அட்லாண்டிக் கடல். 921. ஹாங்கர் (Hangar) என்று பெயர். 922. கள்ளக்கடத்தல் பொருள் என்று பெயர். 923. ஸ்பானிஷ். 924. கரீபியன் கடலில். 925. 22 கெஜங்கள். 926. மெர்க்குரி எனப்படும் (புதன்) கிரகம்.



பூமராங் வீசுபவர்கள்

வி.கே

மின்சாரமும், பெட்ரோலும், விமானமும், விண்வெளிப் பயணமுமாக புயல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் நாகரிக உலகத்தில் இவை எதனாலும் பாதிக்கப்படாமல், தங்கள் புராதனப் பழக்க வழக்கங்களிலேயே இன்றும் வாழ்ந்து வரும் மக்கள் இந்த உலகின் பல பகுதிகளில் வசித்து வருகிறார்கள். அவர்களில் முக்கியமானவர்களாக ஆஸ்திரேலியப் பழங்குடிகளைக் கூறலாம்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தங்கள் மூதாதையர்கள் எப்படி வேட்டையாடினார்களோ அப்படியே அதே முறையில் இன்றும் வேட்டையாடி உணவைத் தேடிக் கொள்கிறார்கள். அணு யுகத்தில் கற்கால வாசிகளாக வாழும் ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மிகக் கூர்மையான அறிவு படைத்தவர்கள். ஒரே இடத்தில் நிரந்தரமாகத் தங்குவதில்லை. உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்துக் கொள்ளத் தெரியாதாகையால் ஒவ்வொரு நாளும்வேட்டையாடி அன்றன்றைக்குக் கிடைப்பதை உண்டு வாழ்கிறார்கள். இவர்களுடைய உடைமைகள் என்பதெல்லாம் சில ஆயுதங்களும் கருவிகளும் தான். இவர்களுடைய உடைமைகளில் முக்கியமானவை ஈட்டி, பூமராங், வூமரா ஆகியவைதான். 'வாழ்வா, பட்டினியால் சாவா' என்பதைத் தீர்மானிக்கும் கருவிகள் இவை. இந்தப் பழங்குடிகளின் ஈட்டிகள் ஒன்பதடி நீளமிருக்கும். மிக இலேசானவை. வெகு தூரத்தில் உள்ள பிராணிகளையும் குறி தவறாமல் வீழ்த்தக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள் இவர்கள். அதி வேகமாக ஓடக்கூடிய பிராணிகள்கூட இவர்களது வேட்டையிலிருந்து தப்ப முடியாது. ஆஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியின் கடற்கரையோரமாக வாழும் ஆதிவாசிகள் 'டுகாங்' என்னும் (கடல் பசு) கடல் வாழ் பிராணியை வேட்டையாடும் சாமர்த்தியத்தைப் பாருங்கள். ஆழமற்ற பகுதிகளில் வாழக்கூடிய பிராணி இது. ஆனால் குளிர்ந்த ரத்தமுடையதல்ல. ஆகவே சுவாசிக்க நீர் மட்டத்துக்கு மேலே தான் வரவேண்டும். நீருக்குள் இருக்கும்போது நீர் உள்ளே புகுந்து மூழ்கா







திருக்க இதன் தலைப் பகுதியில் ஒரு 'வால்வ்' உண்டு.

கடல் பசுக்களை வேட்டையாட இப்பழங்குடிகள் தங்கள் படகின் பக்கங்களைத் தட்டுகிறார்கள். இந்த அதிர்ச்சி அலைகள் நீரில் பரவ நீரின் அடியில் உள்ள கடல் பசுக்கள் நீர் மட்டத்துக்கு மேலே வருகின்றன. உடனே ஆஸ்திரேலிய ஆதிவாசி தன் விரலை அதன் தலையில் உள்ள வால்விலே வைத்து அழுத்திக் கொள்ளுவான். அதனால் இப்போது நீருக்குள் மூழ்கி ஓட முடியாது. வால்வ் செயலற்றுப் போயிற்றே! உடனே மற்றவர்களின் ஈட்டி அதன் உடலில் பாய அந்தப் பரிதாபமான பிராணியைக் (அரை டன் நிறையுள்ளது) கரைக்கு இழுத்து வந்து விடுவார்கள். உயிருள்ள ஒரு குதிரையை நீர் அருந்த வரும்போது அதன் வாயைக் கவ்வி நீருக்குள் இழுத்துச் செல்லும் வல்லமை பெற்ற முதலைகளையே இவர்கள் சர்வ சகஜமாகத் திண்டாட வைத்து அதன் உடலில் குண்டூசி குத்தி வைக்கும் குஷனைப் போல ஈட்டிகளைச் செலுத்திக் கொன்று விடுவார்கள்.

வெள்ளையர்கள் இவர்களைச் சோம்பேறிகள் என்று வர்ணிக்கிறார்கள். கடின உழைப்புத் தேவையில்லாத நிலை. பசிக்கு உணவு, உடுக்கத் தேவையான ஆடை இவை கிடைத்த பிறகு திருப்தியடைந்துவிடும் ஆதிவாசியை நாகரிகவாசி உழைப்பில்லாத சோம்பேறி என்பது எப்படிப் பொருந்தும்?

ஆஸ்திரேலிய ஆதிவாசிகளின் பார்வை மிகமிகத் தீட்சண்யமானவை. பூமியில் காணும் மிக நுண்ணிய தடையங்களிலிருந்து அந்த வழியாக எந்தப் பிராணி போயிருக்கும், எந்தத் திசையில், எத்தனை நேரத்துக்கு முன், எந்த வேகத்தில், அதன் உருவ அமைப்பு, வயது இத்தனையையும் அறிந்து சொல்லும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. இந்த அற்புத சக்தியை வெள்ளையர்கள் கண்கூடாகப் பல சந்தர்ப்பங்களில் கண்டு பிரமித்திருக்கிறார்கள். தங்களுக்குத் தெரியாத விஷயங்கள் அவர்களுக்குத் தெரியும் விந்தையை எண்ணி வியந்திருக்கின்றனர். எந்த விஷயங்களையும் உன்னிப்பாகக் கவனிக்கும் தன்மை, கண்ணும் காதும் மூக்கும் கூர்மையாக இருப்பது இவையே இவர்களின் இத்திறமைக்குக் காரணம். ஒரு மைலுக்கு அப்பால் குளிர் காய்வதற்குத் தீமூட்டி உட்கார்ந்து கொண்டிருப்பவர் புகையிலைக் குழாயைப் புகைத்தால் அதன் மணத்தைக் கொண்டு அதைச் சொல்லி விடுவார்கள். ஒரு மைலில் ஒரு குதிரை வெகு தூரம் ஓடியதனால் வியர்வை வழிய நிற்குமானால் அந்த வியர்வை மணத்தைக் காற்றில் நுகர்ந்து அதன் இருப்பிடத்தைக் கூறி விடுவார்கள். ஆஸ்திரேலிய அரசாங்கம் இப்பழங்குடி மக்களிடமுள்ள இத்தகைய அபார ஆற்றலுக்காக இவர்களைப் போலீஸ் இலாக்காவில் பணியாற்ற அமர்த்திக் கொண்டுள்ளனர். இவர்களுக்குப் 'பிளாக் டிராக்கர்' (Black Tracker) என்று பெயர்.

இவர்களில் பல இனத்தவர் உண்டு. ஆனால் தங்களுக்குள்ளே அமைத்துக் கொண்ட கட்டுப்பாடுகளை ஒருபோதும் மீறவே மாட்டார்கள். தாங்கள் வசிக்குமிடத்தில் உணவுத் கட்டுப்பாடு ஏற்



ஷீலா எங்கே?
இன்னமும் காணோம்!
புகைப்படம்: எம். ஆர். வெங்கட்ரமணன்

பட்டாலும் கூட மற்ற இனத்தவரின் எல்லைக்குள் போக மாட்டார்கள். தங்களுடையது என்று எதையும் தனிப்பட்ட முறையில் சேமித்து வைத்துக் கொள்வதும் இவர்களிடம் கிடையாது. ஒரு கூட்டத்தில் உள்ள அத்தனை பேருக்கும் உணவு, உடைமை எல்லாமே சொந்தமானவை. சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுவார்கள். முதியோருக்கும் பலவீனமானவர்களுக்கும் மட்டுமே சில குறிப்பிட்ட உணவு வகைகள் ஒதுக்கப்படும். அதில் மற்றவர்களுக்குப் பங்கு கிடையாது.

ஆஸ்திரேலியப் பழங்குடிகள் மன நிறைவோடு வாழக்கூடியவர்கள். நட்புள்ளம் கொண்டவர்கள். தன்னுடைய புராதனமான பூமி எல்லைக்கு வெளியே இறந்தால் தன்னுடைய ஆத்மா மறுபடி இவ்வுலகுக்கு வரவே வராது என்ற நம்பிக்கை இவர்களிடையே நிலவுகிறது.

அமெரிக்கச் செவ்விந்தியர்களைப் போல புகையை உண்டாக்கி அது மேலே எழும்பிச் செல்லும் முறைகளைக் கொண்டு சைகை மூலம் செய்திகளை அனுப்பும் பழக்கம் இவர்களிடமும் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஒரு கயிற்றை இரு கைகளின் விரல்களிடையே பல விதமாக வலை பின்னிக் காட்டுவதன் மூலம் ஒருவித சைகை பாஷையை உருவாக்குகிறார்கள். இப்படிக் கயிற்று வலை பின்னி இருநூறுக்கும் மேற்பட்ட தகவல்களைத் இவர்களால் தெரிவிக்க முடியும். சிறு குழந்தையாக இருக்கும் போதே இக்கலையைக் கற்பித்து விடுகிறார்கள்.

இவர்களுக்கு வேட்டையிலும் வீட்டிலும் துணையாக இருப்பது நாய்கள்.

கோரோபோரீ (Corroboree) என்பது இவர்களுடைய நடனத்துக்குப் பெயர். பாட்டும் ஆட்டமும் இவர்களுக்கு விருப்பமான பொழுது போக்கு. உடலில் பல வண்ணங்களில் கோலங்களை வரைந்து கொள்வார்கள். அது அவர்கள் வேட்டையாடிய மிருகங்களைக் குறிக்கும் விதமாக இருக்கும்.

ஊமரா என்ற கருவியைக் கொண்டு நெருப்பு உண்டாக்குவார்கள். மரத்தில் நெருப்புக் கடைவது என்று கேள்விப்பட்டிருப்பீர்களே. இந்த ஊமராவை மற்றொரு மரத்தில் வைத்து வேகமாகத் தேய்க்கும்போது நெருப்பு உண்டாகும். உணவைப் பக்குவம் செய்ய இப்படி நெருப்பு உண்டாக்கி அடுப்பு மூட்டிக் கொள்ளுகிறார்கள். கிழங்குகள், பழங்கள், இறைச்சி ஆகியவைகளுக்கு இனிப்புச் சுவை கூட்டத் தேன் எறும்புகளைத் தேடிப் பிடித்துப் பயன்படுத்துகிறார்கள். இவ்வகை எறும்புகளின் உப்பிய பெரு வயிற்றில் நிறையத் தேன் இருக்கும்.

பூமராங் என்ற, தாக்கித் திரும்பி வரும் அற்புத ஆயுதம் இவர்களிடம் தான் இருக்கிறது. இதை வீசும் லாகவத்தில், அது குறிப்பிட்ட பிராணியைத் தாக்கிவிட்டு மறுபடி வீசப்பட்டவரிடமே திரும்பி வரும் தன்மை படைத்தது.

மாரிக் காலங்களில் குடிசைகளிலும் கோடையில் மரப் பட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட கூடாரம் போன்ற காற்றோட்டமான அமைப்புகளிலும் வாழ்கிறார்கள். வெள்ளையர்களின் ஆக்கிரமிப்பாலும், நாகரிகத்தாலும் இவர்களுடைய இனம் குறைந்து வருவதைத் தடுக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் இவர்களுக்கென ஒரு பிரதேசத்தை ஒதுக்கி அதில், இவர்கள் தன்னிச்சையாக வாழும்படி செய்திருக்கிறது. அந்தப் பிரதேசத்துக்குள் அந்நியர் யாரும் அனுமதி இன்றிப் போகக் கூடாது என்று சட்டமே இயற்றியுள்ளனர். நாகரிகமடையா விட்டாலும் திறமையிலோ நுண்ணிய அறிவிலோ குறையாத இந்தப் பழங்குடி மக்கள் அற்புதமானவர்களே!



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே. சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. © ஆசிரியர் [illegible]

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...

